# தீண்டாமை ஒழிப்புச் சட்டம்

SCANNED

ஆசிரியர்.
**மு. ஜகன்னாதன், பி. ஏ., (ஹானர்ஸ்)**
பி. எல்., அட்வகேட்,

சென்னை சட்டசபை அங்கத்தினர்,
சென்னை சர்வகலாசாலை செனட் அங்கத்தினர்.
திண்டிவனம் நகராண்மைக் கழக அங்கத்தினர்.

110493

புத்தகம் கிடைக்குமிடம் :—

நம்பர், 33. சிங்காரத் தோப்பு வீதி
திண்டிவனம்,
தென் ஆற்காடு ஜில்லா,

முதற்பதிப்பு ஜூன் 1957.
உரிமை ஆசிரியருக்கே.

Z2,5127'N56
N57

விலை அணா எட்டு

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110493
EGMORE, MADRAS-600 008

ஜீவோதயம் அச்சகம், சென்னை-5.

# முன்னுரை

நம் நாட்டில் ஹரிஜனங்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருப்பதற்கு அடிப்படையான காரணம் தீண்டாமையே. இவர்களின் சீர்கேடான வாழ்க்கைக்குக் காரணமான தீண்டாமை என்னும் தீய வழக்கத்தைப்போல் எந்த தேசத்திலும், எக்காலத்திலும் இருந்ததில்லை. இக்கொடிய வழக்கமே ஹரிஜனங்களாகிய இந்நாட்டின் பழங்குடி மக்களைச் சேரிகளில் ஒதுக்கவும், அவர்களை ஒடுக்கவும் ஒரு கருவியாக கையாளப்படுகிறது. ஆகவேதான் பல இன்னல்களை உண்டாக்கும் இந்த அநாகரிகமான வழக்கம் அடியோடு ஒழிந்தால் ஹரிஜனங்கள் முன்னேற முடியும் என்று இந்திய அரசியல் அமைப்பில் தீண்டாமை ஒழிக்கப்பட்டு இருக்கிறது. அவ்வாறு தீண்டாமை ஒழிக்கப்பட்டதால் உண்டாகும் உரிமைகளை ஹரிஜனங்கள் பெறுவதற்குத்தான் இந்திய அரசாங்கம் 1956-ம் ஆண்டில் தீண்டாமையையும் அதனால் ஏற்படும் சகலவித தகுதியின்மைகளையும் (disabilities) சட்ட விரோதமாக்கி, தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் இயற்றியிருக்கின்றது. இச்சட்டம் இதுவரை அமுலில் இருந்த இதர சட்டங்களிலும் சமூக பழக்க வழக்கங்களிலும் பெரிய மாறுதல்களை உண்டுபண்ணி விட்டது. இது சமுதாயத்தில் ஒரு பெரும் புரட்சியை செய்வதற்கு அனுகூலமாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே தீண்டாமையை அதிகார பூர்வமாக ஒழிக்க பிற

பிக்கப்பட்ட இச்சட்டத்தை எல்லோரும், குறிப்பாக ஹரிஜனங்கள், தமிழில் படித்தறிந்து பயனடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகம் நம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் என்று எண்ணுகிறேன்.

ஆசிரியர்

**மு. ஜகன்னாதன்**



மு. ஜகன்னுதன் B. A. (Hons), B. L.
அட்வகேட்.

# தீண்டாமையால் விளையும் தீமைகள்

இந்திய சாதி ஏற்பாடு மிகவும் பழமையானது. ஆரம்பத்தில் அது அவ்வளவு கட்டுப்பாடுடையதாக இருக்கவில்லை. எனினும் நாளடைவில் சாதியில் பல பிரிவுகள் ஏற்பட்டு ஒவ்வோன்றும் கட்டுப்பாடு உடையதாக மாறிற்று. "இந்தியாவில் சாதியின் சரித்திரம்" (The History of caste in India) என்ற புத்தகத்தில் எஸ். வி. கேட்கார் கூறுவது கவனிக்கத் தக்கது. "இந்தியாவில் இருக்கும் முப்பது கோடி மக்களில் இருபது கோடி மக்கள் ஹிந்துக்கள். எட்டுக்கோடி மக்கள் மகம்மதியர்கள். அந்த இருபதுகோடி ஹிந்துக்களும் வெவ்வேருன வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும், அபிவிருத்திச் செய்யப்பட்ட பத்தோன்பது மொழிகளையும் (Languages) நூற்றுக்கு மேலான வேறுபாடுடைய நாட்டு மொழிகளையும் (dialects) பேசுபவர்களாகவும் இருக்கிருர்கள். மீண்டும் மூவாயிரம் சாதிகளாகவும், அவர்களில் பெரும்பாலோர் உப சாதிகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்களுக்குள் கலப்பு மணமும், சமபந்தி போஜனமும் கிடையாது" என்று அவர் கூறுகிருர்.

இவ்வளவு அதிகமான சாதி வித்தியாசம் நம் நாட்டில் ஏன் உண்டாயிற்று? எந்த அடிப்படையில் உண்டாயிற்று? என்று ஆராய்வது அவசியம். பிறப்பால் சாதியா? அல்லது தொழிலால் சாதியா? என்ற கேள்வி இயற்கையாகவே எழுகின்றது. ஆக்ரா, அயோத்தி மக்கள் எண்ணிக்கை அதிகாரியாய் (Census Commissioner) இருந்த நேஸ்பீல்டு என்பவர் தொழில்பற்றியே சாதிகள் உண்டாயினவென்றும்; தொழில்

களின் ஏற்றத் தாழ்வுக்குத் தக்கபடி சாதியிலும், உயர்வு தாழ்வு ஏற்பட்டதேன்றும் கூறுகிறுர். மேனுடுகளில் இப்பொழுது வகுப்பு (Class) ஏற்பாடு இருப்பது போலவே இந்தியாவிலும் சமுதாய ஆசாரங்களேயும் தொழில் முறைகளேயும் தழுவி சாதி ஏற்பாடு உருப்பெற்றிருந்தது. ஆனுல் தொழில் காரணமாக தோன்றிய சாதி ஏற்பாடுகள் நாளடைவில் பிறப்பின் காரண மாக கடைப்பிடிக்கப்பட்டு பிறப்பால் உயர்ந்த சாதி என்றும் தாழ்ந்த சாதி என்றும், தீண்டப்படாத வகுப்பினர் என்றும் கருதப்பட்டு வருவதால் இந்நாட்டின் நாகரிகம், முன்னேற்றம் சமுதாய வளர்ச்சி முதலியவைகள் சீர்குலேந்து வருகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. இன வித்தியாசங்களால் ஏற்படும் இன்னல்களேவிட, தீண்டாமையால் ஏற்படும் தீங்கு கள் எண்ணற்றவை. இவ்விஷயமாய் சென்னே ஹரிஜன நல இலாக்காவின் "தீண்டாமை" என்னும் வேளியீடு பின்வருமாறு கூறுகிறது.

"தீண்டாமை என்ற சொல் அகராதியில் இருக்கும்வரை யிலோ அல்லது பழக்கத்தில் கடைப்பிடித்து வரும் வரை யிலோ ஒவ்வொரு இந்தியனும் அவமானத்தால் தலே குனியத் தான் வேண்டும். தீண்டாமைப் பழக்கம் இருக்கும் வரை யில் இந்திய ஒற்றுமையிலும் சரி, தேசிய உணர்விலும், தேச பக்தியிலும் சரி நாம் குறையுடையவர்களாகவே இருப்போம். இந்தப் பலவீனம் நம் சுதந்திரத்திற்குத் தீமையாய் முடியும். இந்திய அடிமைத் தனத்திற்குக் காரணமாயிருந்து நம் மிடையே இருந்த ஒற்றுமைக் குறைவும் சாதிப் பிரிவுகளுமே என்பது திண்ணம். இந்த அடிப்படையான காரணத்தை நாம் மீண்டும் மறக்க முயன்ருல் வரலாற்றிலிருந்து நாம் பாடம் கற்கத் தவறியவர்களாவோம். மேலும் தீண்டாமை என்பது ஒன்றே நம் பெருமைகளே எல்லாம் குறைக்கப் போதும். இதைக் கடைப்பிடிப்பதன் மூலம் நம்முடைய காட்டு மிராண்டித்தனத்தை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்

ளக் கூடாது. நம் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாமல் அடுத்தவன் வீடு சுத்தமாக இருக்கவேண்டும் என்பதில் அர்த்தமே இல்லை. தீண்டாமை என்பது நமக்கு ஒரு சாபத் தீடு. ஆதியிலும் சாதியிலும் தீண்டாமை இருந்ததில்லை. புரட்டர்களும், எத்தர்களும் கூடி ஏற்படுத்திய இத்தீய பழக்கத்தை அறவே ஒழித்துக் கட்டாதுபோனுல் நாம் உண்மையில் சுதந்திர மனிதர்களாக மாட்டோம். சமத்துவம், சகோதரத்துவம் என்பதும் ஏற்படாது. புத்தம் புதிய இந்தியாவை உருவாக்குவதில் தீண்டாமை ஒழிப்புத்தான் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. சாதிகளும் தீண்டாமையும் ஒழியும்போது தான் இனப் பூசல்கள் மறையும். ஒரு குலத்துக்கோரு நீதி என்ற நியதிக்குத் தீ வைத்துவிட வேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற நம் பழந்தமிழ்க் கோள்கைக்கு ஏற்ப நாம் வாழப் பழகவேண்டும். ஒன்றே குலம் என்ற கோள்கையைத் திக்கெட்டும் பரப்பும் வகையில் நமக்கு இடையூருய் இருப்பது இத் தீண்டாமையே ஆகும். மனிதரிலே உயர்ந்தோர், நன்மக்கள் யாரும் தீண்டாமையைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். இதற்கு வேத இதிகாச புராணங்களிலிருந்து ஆதாரம் காட்டுவது சாத்தான் வேத நூலில் இருந்து ஆதாரம் காட்டுவதையே ஒக்கும்.

தீண்டாமை இந்திய உயர்வுக்கும், வளர்ச்சிக்கும், நாகரிகத்திற்கும் மிகப் பேரிய கேட்டை ஏற்படுத்திவிட்டது. தீண்டாமையை ஒட்டிய சாதிப் பிரிவுகள் இருக்கும் வரையில் இந்திய முன்னேற்றம் சாத்தியமில்லை. இந்தியா சுதந்திரம் பேற்ற பிறகு அரசியல் சட்டத்தில் தீண்டாமை பாராட்டக்கூடாது என்றும் அது தண்டனைக்குரிய குற்றமேன்றும் சோல்லப் பட்டிருப்பது உண்மையே. இருந்தாலும் நடைமுறையில் மக்கள் மனப்போக்கில் தீண்டாமை ஒழிந்தபாடில்லை.

"தீண்டாமை என்பது தோடாமை, பார்க்காமை என்பதை மட்டும் உள்ளடக்கி நிற்கவில்லை. வேறு பல கேடு

களையும் அது தன்னுள்ளே வைத்துக் கொண்டிருக்கிறது. தீண்டாமையை அறவே நாம் நாட்டைவிட்டு நீக்கினாலன்றி நாம் உலகத்தின் நாகரிக மக்களோடு தலை நிமிர்ந்து நடக்க முடியாது. நாமும் உயரமாட்டோம். தீண்டாமையின் பொருட்டு இந்தியா கொடுத்துள்ள விலை மிக மிக அதிகம். பிறப்பிலேயே மக்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதப்படும் இக்கொடிய பழக்கம் வேறு எந்த நாட்டிலும் இல்லை. மற்ற நாடுகளில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒட்டி இன, வகுப்பு வேறு பாடுகள் இருந்திருக்கின்றன. இவ் வேறுபாடுகளையும் அடி யோடு ஒழித்துவிடக் கூடிய இயக்கங்கள் தோன்றி வேலை செய்து வருகின்றன."

"தீண்டாமை கடவுளால் ஏற்படுத்தப்பட்டதென்பதும், அவரே பல வர்ண பேதங்களை ஏற்படுத்தினர் என்பதும் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் நிற்க முடியாத கூற்றாகும். மனித வரலாற்றை ஆராய்ந்தவர்களும் படித்தவர்களும் இந்த அபத்தங்களை மிகத் தெளிவாகப் புரிய வைத்திருக்கின்றனர். சமூக வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் வஞ்சகர் களும், சுயநலக்காரர்களும் ஏற்படுத்தியதே இத் தீண்டாமை யாகும். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு வரலாறு இருக்கிறது என்பதை ஹால்டன் என்ற ஆங்கில விஞ்ஞானப் பெரு மக னார் எழுதிய நூலில் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டி இருக் கிறார். இத் தீண்டாமைக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. இதை மனித வரலாற்றோடு சேர்த்துக் கவனிக்க வேண்டியது முக்கியம். மனிதன் பிறந்து வளர்ந்த கதை மிகப் பெரிய தோர் இதிகாசம் ஆகும். இதனைச் சரியாகப் புரியவைப்பதன் மூலம் நாம் மக்களை ஆழச் சிந்திக்க வைக்க முடியும். இத னால் மக்களிடையிலே மிக அதிகமாகப் பரவியுள்ள அறியாமை யையும் மூடப்பழக்க வழக்கங்களையும் ஒழித்துக்கட்ட முடியும். அறியாமை உள்ள இடத்துக்கு அறிவையும், இருட்டுக்கு வெளிச்சத்தையும் கொண்டு போவதன் மூலம்தான் நம் நாட்

டில் பகுத்தறிவு வளர்ந்தோங்கும். பகுத்தறிவு பரவினுல் தான் மூடக் கட்டுப்பாடுகள் ஒழிந்து மனிதன் மனிதனுக வாழக்கூடிய நிலைமை உண்டாகும். இனி தீண்டாமையோடு கடவுள் பெயரையும் ஒட்டவைத்துப் பேசுவது கடவுளையே கேலி செய்வதற்கு ஒப்பாகும். கடவுளுக்குச் சொல்லப்பட்டிருக்கும் உயரிய பண்புகளோடு தீண்டாமையைச் சேர்த்துப் பேசுவது அறிவுடைமையன்று. இது விவாதத்துக்கு நிற்க முடியாத கூற்றுமாகும்.''

தீண்டாமையையும் அதனுல் விளையும் கொடுமைகளையும் அநீதிகளையும் ஒழிப்பதற்கு முற்காலத்திலிருந்தே புத்தர், அசோகர், இராமாநுஜர், குருநானக், ராஜாராம் மோகன்ராய், சுவாமி விவேகானந்தர், வள்ளலார் இராமலிங்க அடிகள், காந்தி மகான் போன்ற உலகம் போற்றும் உத்தமர்கள் அவர்களின் வாழ்நாட்களில் அரும்பாடுபட்டு வந்திருக்கின்றனர். இன்றும் ஆச்சாரியா விநோபாவே அவர்கள் இன வேறுபாடுகளையும் தீண்டாமையையும், வன்மையாகக் கண்டித்து வருகிருர், பல எதிர்ப்புக்களுக்கிடையே. எனினும் தீண்டாமை நம் நாட்டில் இன்னும் ஒழிந்தபாடில்லை. இதை ஒழிப்பதற்கு அரசினர் முயற்சியும், மக்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாதன. சுமார் இருநூறு ஆண்டுகள் இந்நாட்டையாண்ட ஆங்கிலேயர்கள் தீண்டாமையை ஒழிக்க சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார்கள். அவர்கள் அப்படிச் செய்திருந்தால், அவர்களின் நோக்கங்களை இந்தியர்கள் தவருக கருதுவார்கள் என்றுதான் ஆங்கிலேயர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தவில்லையென்று கூறப்படுகிறது. அதுவல்ல உண்மையான காரணம். இந்தியர்களின் சமுதாய ஊழல்களைக் களைவது அந்நாட்டு மக்களின் நாகரிகத்தை வளர்ப்பதற்கு வழிகாட்டியாய் இருக்கும் என்ற காரணத்தால் அலட்சியமாக இருந்துவிட்டார்கள் ஆங்கிலேயர்கள் என்பது மிகவும் பொருந்தும். அந்நிய அரசாங்கம் நாட்டு மக்களின் அறியாமையையும்

அநாகரிகத்தையும்,வளர்க்கும் சுதந்திர அரசாங்கம் அறிவையும் நாகரிகத்தையும்வளர்க்கும்'' எனஅயர்லாந்துநாட்டின்தேசபக்தர் டோன்ஸ் மாக்ஸ்வினி என்பவர்கூறியஉண்மையைத்தான் இது உணர்த்துகிறது. ஆங்கிலேயர்கள் இந்தியமக்களின் முன்னேற்றத்திற்காகப்பாடுபடுவதைவிட,அவர்களைப்பிரித்தாளுவதில்தான் (Divide and rule) முழு கவனத்தையும் செலுத்திவந்தார்கள். அதனால்தான் நம் சமுதாய ஊழல்கள் சற்றேனும் குறையவில்லை.

## ஆலயப்பிரவேச இயக்கம்

(Temple Entry Movement)

முதன் முதலாக திருவிதாங்கூரில் உள்ள ஈழவர்களால் கோயில் நுழைவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. திருவாளர்கள் T.K. மாதவன், குஞ்சுபணிக்கர் போன்ற ஈழவர்களின் தலைவர்கள் 1919, 1920, 1921-ம் ஆண்டுகளில் ஈழவர்கள் சமுதாய அரசியல் விஷயங்களில் அனுபவிக்கும் கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டுமென்று எடுத்துக்கொண்ட பெரும் முயற்சிகள் எல்லாம் தோல்வியுற்றன. ஏன்? அந்த சமஸ்தான திவான் அவர்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை, மத விஷயங்களில் தான் தலையிடக் கூடாது என்ற காரணத்தால். பிரிட்டிஷ் இந்தியாவில் 1923-ம் ஆண்டு காகிநாடாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் கேரளத்திலிருந்துவந்த தலைவர்களின் முயற்சியால், கேரளத்தில் வாழும் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1924-ம் ஆண்டில் காங்கிரஸ் தலைவர்களும் கேரள நாட்டின் தலைவர்களும் சேர்ந்து திருவிதாங்கூர் இராஜ்ஜியத்திலுள்ள வைக்கம் என்னும் ஊரில் ஹிந்துக் கோவிலுக்குள் ஹரிஜனங்கள் நுழையக் கூடாது என்றும் அக்கோயிலின் அருகிலுள்ள பாதைகளில் ஹரிஜனங்கள் நடக்கக்கூடாது என்றும் இருந்த வழக்கத்தை

எதிர்த்து ஒரு சத்தியாக்கிரகம் செய்தார்கள். அதில் அவர்கள் வெற்றிகண்டார்கள்.கடைசியாகதிருவிதாங்கூர் மகாராஜாவின் பிறந்ததினமாகிய 1935-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி விடுத்த சாசனத்தின்படி அந்த ராஜ்ஜியத்தில் உள்ள எல்லாக் கோயில்களும் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்டடன.

செப்டம்பர் 1932-ம் ஆண்டில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உண்ணு விரதத்தை மகாத்மா காந்திஅடிகள் மேற்கொண்டதோடு ஆலயப் பிரவேச இயக்கத்தின் சரித்திரத்தில் நாம் ஒரு புதிய சகாப்தத்தில் நுழைகின்ருேம் என்ருல் மிகையாகாது.அதே ஆண்டில் ஹிந்துக்களுக்கும்தாழ்த்தப்பட்டவகுப்பினருக்கும் ஏற்பட்ட எரவாடா ஒப்பந்தமானது பம்பாயில் நடைபெற்ற மகா நாட்டில் ஆமோதிக்கப்பட்டு ஹரிஜனங்களின் கஷ்டங்களேயும் அவர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களேயும் ஒழிப்பதற்காகவும் போதுவாக அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் ஹிந்து சமுதாயத்தில் அவர்களிருக்கும் அந்தஸ்து உயர்வதற்காகவும் ஹிந்து தலேவர்கள் சமாதானமான, சட்டபூர்வமான முறைகளில் உழைப்பது அவர்களின் கடமை என்றும் தீர்மானிக்கப்பட்டது. மகாத்மாகாந்தி அவர்கள் எந்தக் கோயிலில் தாழ்த்தப்பட்டோருக்கு இடம் இல்லேயோ அந்தக் கோயிலில் தாம் நூழைவதில்லே என்ற நோன்பு கோண்டிருந்தார். 1936-ம் ஆண்டில் அவர் பெங்களூருக்கு வந்தபோது இந்த உண்மையைப் பிறருக்கு வற்புறுத்திக் கூறினுர். "ஹரிஜனங்களே நுழையவிடாத கோயிலேப் பாம்பு இருக்கும் இடத்தைப்போல் கருதிப் புறக்கணிக்க வேண்டும். இந்தக் கோயில்களில் கடவுள் இல்லேயேன்று நான் சோல்வது இதனுல்தான்" என்று பல தடவைகளில் பேசி இருக்கிருர்.

சென்னேயில், டாக்டர் பி. சுப்பராயன், அவர்கள் கோண்டுவந்த ஆலய பிரவேச மசோதாஎம். சி. ராஜா, சி. எஸ். ரங்கா அய்யர் முதலியவர்கள் கோண்டுவந்த தீண்டாமை ஒழிப்பு மசோதாக்கள் எல்லாம் சட்டசபையில் நிறை

வேற்ற முடியாமல் போனதற்கு வைதீகர்களும், பழமை விரும்பிகளும், காரணம் ஆவர். ஆனுல்கடைசியாக கனம் சி. இராஜகோபாலாச்சாரியார் முதன்மந்திரியாயிருந்த காலத்தில் 1938-ம் ஆண்டில்மலபார்கோயில்நுழைவுச்சட்டம்நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர் 1939-ம் ஆண்டு கோயில்நுழைவுஅவசரச் சட்டமும் கோயில் நுழைவு ஈடுபண்ணும் சட்டமும் நிறைவேற்றப்பட்டன. அதனுல் சென்னை மாகாணத்தில் உள்ள கோயில்களில், மதுரை மீனுட்சியம்மன் கோவில் உட்பட ஹரிஜனங்கள் நுழைவதற்கு சலுகை ஏற்பட்டது. இதர மாகாணங்களிலும் இம்மாதிரியான சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனுல் காங்கிரசுக் கட்சியோ அல்லது சீர்திருத்தவாதிகளோ இந்தச் சட்டங்களை அனுசரித்து நாட்டில் உள்ள எல்லாக் கோயில்களிலும் ஹரிஜனங்கள் நுழைய வழிவகைகள் செய்யவில்லை என்று சென்னை நகர ஹரிஜன சேவாசங்கக் காரியதரிசியான திரு. எஸ். ஆர். வேங்கட்டராமன் அவர்கள் 1946-ல் வெளியிட்ட "கோயில் நுழைவுச் சட்டம்" (Temple Entry legislation) என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். மேலும் கோயில் நுழைவினுல் ஹரிஜனங்களுக்குற்ற கொடுமைகள் சிறிதளவுங் குறையவில்லை என்ற உண்மையை எவரும் மறுக்கவோ, அல்லது மறைக்கவோ முடியாது. வறுமையை ஒழித்து, சமூகத்தில் ஹரிஜனங்கள் உயர்வடைய நல்ல பல திட்டங்கள் தீட்டி, அவற்றை அமுலாக்கினுல்தான், தீண்டாமை இந்நாட்டில் ஒழியும் என்பதைத் தூய உள்ளம் படைத்த அனைவரும் ஒத்துக் கொள்ளுகிறுர்கள்.

## சமுதாய தகுதி இன்மைகளை நீக்கும் சட்டங்கள்

ஆலயப் பிரவேசச் சட்டங்கள் பல மாகாணங்களில் நிறைவேற்றப்பட்டு, அமுலில் இருந்ததைப்போல் 1938 முதல்

19+9 வரை பல மாகாணங்களில் ஹரிஜனங்களுடைய சமூகத் தடைகளை ஒழிப்பதற்கு சமுதாய தகுதி இன்மைகளை நீக்கும் சட்டங்கள் (Civil disabilities Removal Acts) கொண்டு வரப்பட்டன. இந்தச் சட்டங்களின் கீழ் செய்யப்படும் குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை விதிக்கப்பட்டு இருந்தபோதிலும் இவைகளால் ஒருவித நன்மையும் ஏற்படவில்லை என்பது நாடறிந்த உண்மை. பெரும்பாலான மக்களுக்கு இம்மாதிரியான சட்டங்கள் அமுலில் இருப்பதுகூடத் தெரியாது. சர்க்கார் இச்சட்டங்களை நடைமுறையில் கொண்டுவந்து பயன் விளைவிக்கும் முறையில் செயலாற்றத் தவறிவிட்ட காரணத்தால் அவைகள் ஏட்டளவில் சட்டங்களாக இருந்தனவேயன்றி நடைமுறையில் பயன்படாமல் போயின. ஆகவேதான் தீண்டாமையின் கொடுமைகள் நாட்டில் நீடித்தன இன்னும் நீடிக்கின்றன.

## ஹரிஜனங்களுக்குள் தீண்டாமை

முற்போக்குச் சமூகங்களால் மிகவும் தாழ்ந்தவர்கள் என்று ஹரிஜனங்கள் கருதப்பட்டாலும் 'அவர்களுக்குள் சாதிப் பிரிவினைகளும், உயர்வு தாழ்வும் இருப்பது வெகு விந்தையாகவே இருக்கின்றது. அவர்களுக்குள் தீண்டாமையும் அனுசரிக்கப்படுகின்றது என்றால் இதைவிட வேடிக்கையான — இல்லை, வெட்கரமான விஷயம் வேறு என்ன இருக்கமுடியும்? ஹரிஜனங்களில் உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள், அவர்களில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவரிடம் கல்யாணத் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. ஒருவர் வீட்டில் மற்றவர் உணவு உட்கொள்வதுமில்லை. ஹரிஜனங்களுக்குள் இருக்கும் சாதி கட்டுப்பாடுகள் மிக அதிகம். பிறப்பின் அடிப்படையிலே உயர்வு தாழ்வு சாதியின்பேரால் கற்பிக்கப்பட்டும், கையாளப்பட்டும் வருவதால் ஹரிஜனங்கள் சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்றும், அவர்களின் அந்தஸ்து உயரவேண்டு

மானுல் சாதி வித்தியாசங்களும் தீண்டாமையும் ஒழியவேண்டு மென்றும் விரும்புகின்ற அவர்கள் அதே சமயத்தில் சாதி வித்தியாசங்களையும் தீண்டாமையையும் தங்களுக்குள் வைத்துக்கோண்டிருப்பது பகுத்தறிவு ஆகாது. பிறரிடத்தில் நியாயத்தையும், நீதியையும் எதிர்பார்க்கும் அவர்கள் தங்களுக்குள் அந்த பண்பாட்டை ஏற்படுத்திக்கோள்ளும் சூழ்நிலையைத் தங்கள் சமுதாய வாழ்வில் உண்டுபண்ண வேண்டியது அவர்களின் நீங்காக் கடமையாக இருக்கின்றது. "கண்ணுடி வீட்டில் வாழ்பவர்கள் மற்றவர்மேல் கல் வீசக்கூடாது" (Those who live in Glass houses should not throw stones at others) என்ற முது மோழிக்கேற்ப தங்களுக்குள் இருக்கும் சமுதாய ஊழல்களைச் சீர்திருத்த ஒருவித முயற்சியும் விருப்பமும் அவர்களுக்கிடையே ஏற்படுகின்றவரையில் பிறரைக் குறைகூற அவர்கள் முன்வருவாராஞல் அது வெறும் கேலிக் கூத்தாகத்தான் முடியும் என்பது உறுதி. தீண்டாமை என்பது சாதி என்ற தாய் ஈன்றெடுத்த சேய். இவர்களின் அடக்குமுறைக்குப் பலியாக்கப்பட்டு இவ்வுலகத் துன்பபுரியில் தள்ளப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலும் ஹரிஜனங்களே.எனவேதான் அவர்கள் சாதி வித்தியாசங்களையும், தீண்டாமையையும் தங்களுக்குள்ளிருந்து வேகுவிரைவில் அகற்றுவதற்கு வழிவகைத் தேடவேண்டும். எவவளவு விரைவில் ஹரிஜனங்கள் தங்களுக்குள்ளிருக்கும் சாதி வேறுபாடுகளையும், தீண்டாமையையும் கைவிடுகிருர்களோ அவ்வளவு விரைவில் அவர்களுக்கு விமோசனமும் வாழ்வில் மறுமலர்ச்சியும் தோன்று மென்று எதிர்பார்க்கலாம் ஏற்கனவே பிறரால் தாழ்த்தப்பட்டிருக்கும் ஹரிஜனங்கள் தங்களுக்குள் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற அர்த்தமற்ற கற்பனையை அடியோடு மறக்கவேண்டும். அதோடு எவ்வேப்போது கலப்புமணம் தங்களுக்குள் செய்து கோள்வது சாத்தியமோ, அப்போழுதேல்லாம் கலப்பு மணம் இனபேதமில்லாமல் செய்துக்கோள்ள முன்வரவேண்டும். எவ்வித சாதி துவே

ஷமும் இல்லாமல் ஒருவர்வீட்டில் மற்றவர் உணவு உண்ண வேண்டும். ஒற்றுமை உணர்ச்சி வேண்டும், சேரிகள் என்ற சிறைக்கூடங்களிலிருந்து வெளியேற விரும்ப வேண்டும். இவைகளை ஹரிஜனங்கள் சிந்தித்து செயலாற்ற முன்வந்தால், சீக்கிரத்தில் தங்கள் இன்னல்களுக்கும், இழிவுகளுக்கும், வறுமைக்கும் சிறுமைக்கும், அறியாமைக்கும் அடிமைத்தனத்திற்கும் முடிவு காண்பதோடு மற்றவர்களைப்போல் முன்னேற முடியும் என்பது திண்ணம்.

## மனமாற்றம் தேவை

ஆசிரியர் ஸ்காட் நேரிங் என்ற அமெரிக்கர் " சமுதாயத் திருத்துப் பாடு" (Social Adjustment) என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதாவது," ஒரு தேசத்தாரின் சமூக ஊழல்களை தேச சட்டம் மூலமாகவே நீக்கமுடியும். ஒரு சமூகத்தின் ஆசார ஊழல்கள் போது ஜன அபிப்பிராயத்தால் சில காலம் சீர்பெறக் கூடும். எனினும் சர்வசாதாரணமான சீர்திருத்தம் அரசியல் சட்டம் மூலமாகவே நிலைபெறக்கூடும்" என்பனவாம். எனவே, தீண்டாமையை அறவே ஒழிப்பதற்கு அரசாங்கம் இந்திய அரசியல் அமைப்பில் (Constitution of India) 17-வது பிரிவில் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமானது. மேலும் 1955-ம் ஆண்டில் நிறைவேற்றப் பட்ட 22-ம் சட்டமாகிய தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் அரசியலமைப்பின் மேற்கூறிய நோக்கத்தை நிறைவேற்ற கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனினும் இப்புதியச் சட்டம் எதிர்பார்த்த அளவிற்கு பயன்தர வேண்டுமென்றல் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கக் கூடாது. இல்லையேல் எப்படி ஆலயப் பிரவேச சட்டமும், சமுதாய தகுதியின்மைகளை நீக்கும் சட்டமும் ஏட்டளவில் இருந்தனவோ, அதைப்போலவே இச் சட்டமும் பயனற்றதாக இருக்கும்.

1953-ம் ஆண்டு, ஷெட்யூல் வகுப்பு நலக்கமிஷனர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் இப்புதிய சட்டத்தைப் பற்றிக் குறிப்பி டும்போது பின்வருமாறு கூறுகிறுர்:-"தீண்டாமை ஒழிப்புக்காக இந்தியா முழுமைக்கும் ஒருபடித்தாயுள்ள விரிவான சட்டம் ஒன்று—அதாவது, தீண்டாமை (குற்றங்கள்) சட்டம்—இனி மேல் வெகு விரைவில் சட்டப் புஸ்தகத்தில் இடம்பெறும். அதன் பிறகு சகல ராஜ்யங்களிலும் உள்ள சமூகத் தொண்டர் களும் ஷெட்யூல் வகுப்பினரின்தலைவர்களும் இந்தச்சட்டத்தை முற்றும் பயன்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டவர்களாவார் கள் ; ஆனல் இங்கே ஒன்று சொல்லியாக வேண்டும். அதா வது, அத்தகைய சட்டம் பயனுடையதாக இருக்கவேண்டுமா ஞல் அதன் ஷரத்துக்களைப் பூரணமாகவும், நிச்சயமாகவும் அமுலுக்குக் கொண்டு வருவதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். ஆயினும் பொதுஜன அபிப் பிராயமும் நமக்குப் பக்கபலமாய் இருந்தால் ஒழிய, சட்டத்தி ஞல் மாத்திரம் நாம் பெரும்பயனை எய்திவிட முடியாது." இதி லிருந்து பொது மக்களின், குறிப்பாக முற்போக்குச் சமூகங் களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இச்சட்டம் அமுல் நடத்தப் படுவதற்கு எவ்வளவு இன்றியமையாதனவாக இருக்கின்றன என்பது நன்கு விளங்குகிறது. கல்வி அறிவும், நாகரிகமும் வளர்ச்சி அடைந்துள்ள இந்நாளில் ஓரளவுக்குப் பொதுமக்கள் நம் நாட்டில் உள்ள சமுதாய ஊழல்களைக் களைவதற்கு உறு துணையாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. உண்மை யிலேயே தேச பக்தி உள்ளவர்கள், நாட்டின் முன்னேற்றத் தில் நாட்டமுள்ளவர்கள், சமுதாய சீரமைப்பு வேலைத் திட்டங் களில் முதற்கண் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஏனென்றல், நாட்டின் முன்னேற்றம் அதில் வாழும் மக்கள் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கின்றது. சமூகத்தில் முன் னணியில் இருப்பவர்கள் இவ்விஷயத்தில் ஏனையோருக்கு வழி காட்டியாக இருந்தால்தான் இந்த உயர்ந்த லட்சியம் நிறை

வேறும். தீண்டாமையாலும், சாதி வேறுபாடுகளாலும் நம் நாட்டின் ஒற்றுமை குறைந்தது—வளர்ச்சியும் வாழ்வும் நலி வுற்றன—என்ற உண்மையை எல்லாத் தலைவர்களும் ஒத்துக் கொள்வதுமன்றி அவற்றை வன்மையாகக் கண்டிக்கிறார்கள். நம் இந்தியக் குடியரசின் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள்கூட தாம் எழுதிய "இந்தியாவின் கண்டுபிடிப்பு" (The Discovery of India) என்ற நூலில் சாதி ஏற்பாட் டைக் குறித்துப் பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறார்:—"தகுதி ஒன்றே காரணமாக இருந்தாலும், சந்தர்ப்பங்கள் எல்லோ ருக்கும் அளிக்கப்பட்டாலும் சாதி தனது முக்கிய அமிசங் களை இழந்துவிடுகிறது. உண்மையில் முடிவடைந்தும் விடு கிறது. முற்காலத்தில் சில கூட்டங்களை ஒடுக்குவதற்குக் காரணமாக இருந்ததுமல்லாமல் பரிகற்பனையும் பாடசாலைக் குரியதுமான கல்வியையும், கைத்தொழிலையும் வேறுபடுத்த வும், தத்துவங்களை உண்மையான வாழ்க்கையிலிருந்தும் அதன் பிரச்சனைகளிலிருந்தும் வேறுபடுத்தவும் காரணமாய் இருந்தது. அது சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஒரு அகந்தையான முறையாக இருந்தது. இந்த மனோபாவம் முற்றிலும் மாறியாக வேண்டும். ஏனென்றால் இது இக்காலத்தின் நிலைமைகளுக்கும் ஜனநாயக லட்சியத்திற்கும் முற்றிலும் முரண்பட்டது." பக்கம், 496.

ஏறக்குறைய எட்டுகோடி ஹரிஜனங்கள் தீண்டப்படாத வர்கள் என்று கருதப்பட்டும், சேரிகளில் ஒதுக்கித் தள்ளப்பட்டும் இருப்பது அருவருக்கத் தக்க விஷயம் என்பதைப் படித்தோர் முதல் பாமரர்வரை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் இக்கருத் தைக் காரியத்தில் காட்டுவதற்குத் துணிவும் முயற்சியும் இருப் பதில்லை. தாங்கள் உயர்ந்தவர்கள், ஹரிஜனங்கள் தாழ்ந்தவர் கள், இது ஆண்டவன் ஆணை, என்ற உயர்வு மனப்பான்மை யை (Superiority Complex) கொஞ்சங் கொஞ்சமாக மாற்றிக் கொள்ளவேண்டும் முற்போக்குச் சமுகங்கள். ஏனென்றால்

மக்களுக்குள் பிறவியினுலேயே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று சொல்லிக்கொள்வது இயற்கைக்கு விரோதமான கூற்று. தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் "எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே. ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை" என்ற உயர்ந்த உண்மையை கீழ்வரும் குறளில் விளக்கியுள்ளார்.

> "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய் தொழில் வேற்றுமையான்."

எனவே, ஹரிஜனங்களைப் பிறப்பால் தாழ்ந்தவர்களென்று கூறுவது சற்றும் பொருந்தாது. ஆனுல் அவர்கள் வள்ளுவர் கூறிய வண்ணம் "செய் தொழில் வேற்றுமையால்" தாழ்ந்தவர்களா என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். ஹரிஜனங்கள் என்ன தொழில் செய்கிருர்கள்? அவர்களில் பெரும்பாலோருக்குச் சொந்தமான நிலம் இல்லாவிட்டாலும் விவசாயம் செய்வதில் ஈடுபட்டிருக்கிருர்கள். சிறுபான்மையினர் சலவைத் தொழில், முடிதிருத்தும் தொழில், கால் அணிகள் செய்யும் தொழில், ஊர்துப்புரவுசெய்யும் தொழில் முதலிய இன்றியமையாத—நாகரிக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான—தொழில்களில் ஈடுபட்டிருக்கிருர்கள். இத்தகைய தொழில்கள் இழிவான தொழில்கள் என்று எவரேனும் கூற முடியுமா? ஆகவே "செய் தொழில் வேற்றுமையால்" ஹரிஜனங்களைத் தாழ்ந்தவர்கள் என்று தள்ளிவிட முடியாது. ஆனுல் வள்ளுவர் வாக்கின்படி "செய் தொழில் வேற்றுமையால்" தள்ளப்பட வேண்டியவர்கள்—தாழ்ந்தவர்களாக மதிக்கப்பட வேண்டியவர்கள்—கள் காமம், கொலை, களவு, பொய் முதலிய பஞ்சமா பாதகமான தொழில்களில் ஈடுபட்டிருக்கும் கீழ்மக்கள் தான். இவ்வித தீச்செயல்களைச் செய்பவர் யாராயிருந்தாலும் தாழ்ந்தவர்களாக மதிக்கப்பட வேண்டுமே தவிர பிறப்பை அடிப்படையாகக் கொண்டு உயர்வு தாழ்வு பேசுவதும் இன வேறுபாடுகளையும் தீண்டாமையையும் கடைபிடிப்பதும் நல்லதல்ல.

இவ்வித கண்ணோட்டத்துடன் தீண்டாமைப் பிரச்சினையை நோக்கினுல் ஹரிஜனங்கள் மட்டில் அனுசரிக்க வேண்டிய கொள்கை நன்கு விளங்கும். நாமும் வாழவேண்டும், நம்மைப் போல் அவர்களையும் வாழவிடவேண்டும் (Live and let live) என்ற உயர்ந்த கொள்கையை முற்போக்குச் சமூகங்கள் கையாண்டு, ஹரிஜனங்களைக் கைத்தூக்கி விடும் கடமையுணர்ச்சியுடன் தங்களின் மனோபாவத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால்தான் அரசாங்கம் ஹரிஜன முன்னேற்றத்திற்காக செய்யும் அரும்பெரும் முயற்சிகள் தக்க பலனை அளிக்கும். அவர்கள் கொண்டுவந்துள்ள தீண்டாமை (குற்றங்கள்) சட்டமும் நல்ல முறையில் அமுல் நடத்த தகுந்த சூழ்நிலை ஏற்படும். ஹரிஜனங்களைத் தீண்டாதவர்களாக வெறுத்துத் தள்ளுவதற்குப் பதிலாக அவர்களைச் சகோதரர்களாகப் பாவித்து ஆதரித்தால் தான் சட்டத்தின் நோக்கங்களை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். நம் நாட்டின் சுதந்திரச் சிற்பியான காந்திமகான் அறிவுரைகளுக்கு இவ்விஷயத்தில் செவி சாய்த்தல் சாலவும் நன்று. "ஹரிஜனங்கள் நம் உடன் பிறந்த சகோதரர்கள்...........நாம் அவர்களிடமிருந்து அபகரித்துக் கொண்ட சொத்துக்களை அவர்களுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டும்" என்று "இளம் இந்தியா" (Young India) என்ற பத்திரிகையில் அவர் எழுதியுள்ளார்.

"ஷெட்யூல்டு வகுப்பினர்களே முன்னுக்குவந்து, அரசியல் அமைப்பில் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை வற்புறுத்துவதன் மூலம், அவர்களே க்ஷேம நடவடிக்கைகளில் பெரும்பங்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இதனுல் அவர்களில் சிலருக்குத் துன்பம் நேரிட்டாலுங்கூட அதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் மேற்சொன்னவாறு முன்னுக்கு வந்து தங்கள் உரிமைகளை வற்புறுத்த வேண்டும்" என்று ஷெட்யூல்டு நலக் கமிஷனர் அவர்கள் தமது 1953-ம் வருட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விஷயத்தை ஹரிஜனங்

கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். எப்படி முற்போக்குச் சமூகத்தினரின் உயர்வு மனப்பான்மை மாறுவது அவசியமோ அப்படியே ஹரிஜனங்களின் தாழ்வு மனப்பான்மையும் (Inferiority Complex) மாறியாக வேண்டும். தாங்கள் தாழ்ந்த சாதியில் பிறந்தவர்கள் என்றும் தீண்டப்படாதவர்கள் என்றும், தலைவிதிதான் இவற்றிற்குக் காரணமென்றும் கருதிக் கொண்டு பெரும்பாலான ஹரிஜனங்கள் தங்களின் சீரழிந்த நிலைமையைச் சிந்திக்காமல் அலட்சியமாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த அலட்சிய புத்தியை அறவே கைவிட வேண்டும். பிற சமூகங்களைப்போல அவர்கள் முன்னேற முயல வேண்டும். "தன் கையே தனக்குதவி'' (Self-help is the best help) என்ற பழமொழிக்கேற்ப ஹரிஜனங்கள் தங்கள் சொந்த முயற்சியில் முன்னேறுவதை விட்டு, பிறருடைய உதவியை பெரிதும் எதிர்பார்த்து வாழமுடியாது. ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளையும் அவர்களின் முன்னேற்றத்திற்காகக் கொண்டுவந்திருக்கும் திட்டங்களையும், சட்டங்களையும் பயன்படுத்திக்கொள்ள அவர்களே தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் தங்களின் உரிமைகளை அடைய முடியும் ஹரிஜனங்கள். அவ்வாறு உரிமைகளைப் பெற எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சியினால் அவர்கள் பலவிதமான எதிர்ப்புகளையும், கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடும். வைதீகர்களும், பிற்போக்கு மனப்பான்மையுடையவர்களும், சமூக விரோதிகளும் ஹரிஜனங்கள் முன்னேறுவதற்குச் செய்யும் முயற்சிகளைக் கண்டு பொறாமைப்படுவார்கள். ஆத்திரமடைவார்கள். அன்று ரோமாபுரியில் வாழ்ந்த பேட்ரீஷியன்கள் பிலிபியன்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தனர். ஆனால் முடியவில்லை. பிரெஞ்சு தேசத்தில் வறுமையால் வாடிய ஏழை மக்களின் எழுச்சியை அதிகாரத்திலிருந்த அரண்மனை வாசிகள் தடுத்துப் பார்த்தனர். ஆனால் முடியவில்லை.

அமெரிக்க ஐக்கியநாடுகளில் அடிமைகளாக வாழ்ந்த நீக்ரோ மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க தென் பகுதியில் இருந்த வெள்ளை முதலாளிகள் பணப்பலத்தால் பல விதங் களில் முயன்றனர். ஆனால் அதுவும் முடியவில்லை. இவை கள்தாம் உலக சரித்திரம் கூறும் உண்மைகள். பலாத் காரத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த உரிமைப் போராட்டங்கள் இந்நாட்டு ஹரிஜனமக்களுக்கு வேண்டா தவை. அவசியமற்றவை. நம் நாட்டின் சுதந்திரப் போராட் டத்தின் சரித்திரம் இவர்களுக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக அமைந்திருப்பது அதிர்ஷ்ட வசமே. சுமார் இருநூறு ஆண்டு களாக ஆங்கிலேயர்கள் நம்மை அடக்கி, அடிமைப்படுத்தி அரசாண்டார்கள். அவர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து அண் ணல் காந்தி அடிகள் அகிம்சா தர்மத்தின் அடிப்படையிலே சாத்வீகமான முறையில் நாடெங்கும் கிளர்ச்சி செய்து பெற்றார் நம் நாட்டின் சுதந்திரத்தை. அவர் வகுத்த ஒப்பற்ற அகிம்சா தர்மத்தை ஹரிஜனங்கள் மேற்கொண்டு சட்ட பூர்வமான முறைகளில் தங்களுடைய உரிமைகளை பெறுவதற்கு சற்றே னும் பின் வாங்காது தளரா முயற்சியுடனும் தைரியமான உள் ளத்துடனும் உழைக்க வேண்டும்.

# தீண்டாமை (குற்றங்கள்) சட்டத்தின் விளக்கம்

இந்தச் சட்டம் 1955-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வந்திருக்கிறது. இது இந்தியப் பார்லிமெண்டில் அந்த வருடம் இயற்றப்பட்ட இருபத்திரண்டாவது சட்டமாகும். இச்சட்டம் தீண்டாமையைக் கடைப்பிடிப்பதற்கும் அதனால் ஏற்படும் தகுதி இன்மைகளை (Disabilities) அமுல் நடத்துவதற்கும் அது சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கும் தண்டனை விதிப்பதற்காக இயற்றப்பட்ட சட்டம் ஆகும். நம் நாட்டின் சமூக சரித்திரத்தில் இப் புதிய சட்டத்தைப்போல் சமூக ஊழல்களை நீக்கும் ஒரு நல்ல சட்டம் இதுவரையில் எந்த அரசாங்கத்தாலும் நிறைவேற்றப்படவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்நாட்டில் தொன்றுதொட்டு நிலவிவரும் தீண்டாமை என்னும் தீய வழக்கத்தை அறவே ஒழிப்பதற்கு இச்சட்டம் உறுதுணையாயிருக்கின்றது. ஆனால் இதனுடைய வெற்றியும், தோல்வியும் பொதுமக்களைப் பெரிதும் பொறுத்திருக்கிறது. இச்சீறிய சட்டத்தை நாடெங்கும் வரவேற்று அதனை வெற்றிகரமாக நடத்திவைப்பது பொது மக்களாகிய நமது கடமையாகும். ஏனெனில் கன்னிமேயோ போன்ற அன்னிய நாட்டவர்கள் நமது நாட்டைப் பற்றியும், அதிலிருக்கும் சமுதாய ஊழல்களைப் பற்றியும் இழித்துக் கூறிய பழிகளைப் போக்கவும் சாதி, மத வேறுபாடற்ற நமது பூர்வீக நாகரிகத்தின் மேன்மையை விளக்கவும் இது ஒரு வாய்ப்பாகும். ஜப்பான் தேசத்தில் நிலை பெற்றிருந்த சாதி வித்தியாசத்தின் காரணமாக லாப்கரடியோஹேர்ன் என்பவர் அம்மக்கள் ஜனநாயக ஆட்சி

நடத்தத் தகுதியற்றவர்கள் என்று கூறியதை மறுத்து லாலா லஜபதிராய் அவர்கள் எழுதிய "துரதிர்ஷ்ட இந்தியா" என்னும் புத்தகத்தில் பின்வருமாறு கூறுகிறார். "ஸ்ரீ ஹோர்ன் இவ்வாறு அபிப்பிராயப்பட்டாலும், ஜப்பானில் ஜாதி வித்தியாசம் அநேகமாக ஒழிந்துவிட்டதென்றே கூறலாம்; துரைத்தனத்தாரும், பொதுமக்களும் ஒத்துழைத்ததனால் ஜாதிக் கட்டுப்பாடுகள் எல்லாம் விரைவாக ஒழிந்துவிட்டன. இந்தியர்களும் சுதந்திரம் பெற்றால் அவ்வாறு செய்யக்கூடும்". காலஞ்சென்ற தேசபக்தர் லாலா லஜபதிராய் அவர்களின் கனவை நனவாக்கும் நன்னாளையும் இந்தியக் குடிகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் மேற்கூறிய சட்டம் அரிய சந்தர்ப்பத்தை அளிக்கின்றது என்ற உண்மையையும் மனதில் வைத்து நம் கடமையைச் செய்ய முன்வந்தால் இந்நாட்டிலுள்ள சாதி வித்தியாசங்களும், தீண்டாமை போன்ற அநாச்சாரமான தீய பழக்க வழக்கங்களும் நாட்டைவிட்டு அறவே அகற்றப்படுவதோடு, சாதி மத பேதமற்ற சர்வோதய சமுதாயத்தை சிருஷ்டிக்க முடியும் என்று இதய பூர்வமாக உறுதி கூறலாம்.

## ஆலயங்களும் ஹரிஜனங்களும்

ஹரிஜனங்கள் தங்குதடையில்லாமல் எந்த பொது தேவாலயத்திலும் சென்று கடவுளைத் தொழுவதற்கு இப்புதியச் சட்டம் உரிமை அளிக்கின்றது. இச் சட்டத்தின்படி தீண்டாமையின் காரணமாக யாரும் ஹரிஜனங்களைப் பொது கோவில்களில் நுழைவதற்கும், அவைகளை அடுத்துள்ள புனித குளம், கிணறு, நீரோட்டம் முதலியவற்றில் குளிப்பதற்கும் அவற்றின் நீரை உபயோகப்படுத்துவதற்கும் தடை செய்யக்கூடாது. பழைய கோயில் நுழைவுச் சட்டங்களைவிட இப்புதியச் சட்டம் இவ்விஷயத்தில் அதிகமாகவே உரிமைகளை அளித்திருக்கின்றது. ஆனால் தேவாலயங்களில் அவை எந்த மதத்தைச் சேர்ந்தனவாயினும் சரி—ஹரிஜனங்கள் நுழைந்து ஆண்ட

வனைத் தொழுவதற்கும், அந்த தேவாலயங்களை அடுத்துள்ள நீர் நிலைகளை உபயோகிக்கவும் முழு உரிமையை இப்புதியச் சட்டம் தருகின்றது. மேலும் இச்சட்டத்தின் 3-ம் பிரிவு (a), (b) ஷரத்துக்களை மீறுகின்றவர்களுக்கு பழைய கோயில் நுழைவுச் சட்டங்களில் விதித்துள்ள தண்டனையைவிட அதிக மான தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இப்புதியச் சட் டத்தை மீறுகின்றவர்களுக்கு ஆறுமாதம் வரை வெறுங்காவல் சிறை தண்டனையாவது, ஐநூறு ரூபாய் வரை அபராத தண் டனையாவது அல்லது இரண்டுவித தண்டனைகளுமாவது விதிக்கப்பட்டிருக்கின்றன.

3, 4-ம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக ஒருவர் புத்த மதம், ஜைனமதம், சீக்கிய மதத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் அல்லது வீர சைவர்கள், லிங்காயத்துகள், ஆதிவாசிகள், பிரம்ம சமாஜம், பிரார்த்தனைச் சமாஜம், ஆரிய சமாஜம் அல்லது சுவாமி நாராயண சம்பரதி முதலியவற்றைச் சேர்ந்தவ ராயிருந்தாலும் அல்லது ஹிந்து மதத்தின் அமைப்புகளில் அல்லது விரிவுகளில் எதையாவது தழுவுகின்றவராயிருந்தா லும் அவர் ஹிந்துவாகக் கருதப்படுவார்.

இன்றைக்கும் அநேக ஹிந்துக்கள் கோயில்களில், குறிப் பாக கிராமப்புறங்களில் ஹரிஜனங்கள், தீண்டாமையின் காரண மாக உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. சுவாமிக்குப் பொங் கல் வைக்கும் கோயில்களில், ஹரிஜனங்கள் கோயில்களுக்கு அருகில்போய் பொங்கல் வைக்கவும் ஆண்டவனை ஆராதனைச் செய்யவும் அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி அனுமதிக்கப் பட்டாலும், பிரத்தியேகமான இடங்களில்தான் அனுமதிக்கப் படுகிறார்கள். இனிமேல் இவைகள் எல்லாம் இப்புதியச் சட் டத்திற்கு விரோதமானவை எனக் கருதப்படும். மேலும் இந் தச் சாதி துவேஷம் ஹிந்து மதமேயன்றி இதர மதங்களாகிய கத்தோலிக்க மதம் போன்றவற்றிலும் இருப்பது உண்மையே.

Z2,5127'N56 N57



இவ்விஷயமாய் லாலா லஜபதிராய் அவர்கள் கூறியுள்ளது மிகவும் கவனிக்கத் தக்கது. "கிறிஸ்தவர்களான தீண்டாச் சாதியார் சாதித் தொல்லைகளிலிருந்து விடுபட்டுப்போனதாக அவர் (கன்னி மேயோ) கூறுகிறார். வாஸ்தவத்தில் அவர்கள் விடுதலை அடையவில்லை. அவர்கள் அடைந்ததாகக் கூறப்படுவது முழுப்பொய்யாகும். மைசூர் சென்ஸஸ் ரிப்போர்ட்டில் ஸ்ரீ வி. என். நரசிம்ம ஐயங்கார் கூறும் கீழ்வரும் வரலாறுகள் சென்னை ராஜதானிக்கு மட்டுமன்றி இந்தியா முழுமைக்கும் பொருத்தமானவைகளே. ஸ்ரீ ஐயங்கார் கூறுவதாவது:— "இந்திய சமூக அமைப்பில் ஜாதி ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது.கத்தோலிக்க பாதிரிகள் ஜாதி ஆசாரங்களை அனுஷ்டிக்க சம்மதித்திருப்பதால்ஏராளமான ஹிந்துக்கள் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்துவிட்டார்கள். சென்ஸஸ் உத்தியோகஸ்தர்கள் செய்த ஆராய்ச்சியினால் கிறிஸ்தவர்கள் ஆகும்முன் அவர்கள் அனுஷ்டித்து வந்த ஜாதி ஆசாரங்களைக் கிறிஸ்தவர்கள் ஆனபிறகும் அவர்கள் அனுஷ்டித்து வருவதாக விளங்குகிறது." இன்றைக்கும் அநேக கத்தோலிக்க கோயில்களில் கிறிஸ்தவர்களான ஹரிஜனங்கள், கிறிஸ்தவர்களான வேறு சாதியாரோடு சமமாக உட்கார்ந்து கடவுளை வணங்க அனுமதிக்கப்படுவதில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மையே. இந்த சூழ்நிலை நகரங்களில் காணப்படாவிட்டாலும் கிராமப்புறங்களில் விசேஷமாக இன்றும் இருந்துவருகிறது. இதுவும் இச் சட்டத்திற்கு விரோதமானது. தற்போது கத்தோலிக்க பாதிரிமார்கள் அவர்கள் கோயில்களில் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளை எடுத்துவருவது பாராட்டத் தக்கது.

## சமுதாயத்தில் ஹரிஜனங்கள்

TAMIL NADU ARCHIVES LIBRARY, EGMORE, MADRAS No. 110493

தீண்டாமையின் காரணமாக ஹரிஜனங்கள் படுபாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கிறார்கள், இந்நாட்டின் சமுதாய வாழ்வில். ஆனால் இப்புதியச் சட்டம் அவர்களுக்குப் பிற சமூகத்தினரு

டன் சம அந்தஸ்து அளிக்கிறது. எல்லா கடைகளிலும், பொது ஜன சிற்றுண்டிச்சாலைகளிலும், ஹோட்டல்களிலும், பொழுது போக்கும் இடங்களிலும், தர்ம சத்திரம், சாவடிகளிலும் மற்றவர்களைப்போல் தாராளமாக பிரவேசிக்கலாம் ஹரிஜனங்கள் என்று இச்சட்டம் கூறுகிறது. அதுமாத்திரம் அல்ல. அம்மாதிரியான பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள பாத்திரங்களையும் இதர சாமான்களையும் அவர்கள் மற்றவர்களைப்போல் உபயோகிக்கலாம். தீண்டாமையின் காரணமாக இவைகளை யாராவது மறுத்தால் அவர்கள் இச்சட்டத்தின் கீழ் குற்றம் செய்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

இன்றைக்கும் கிராமப்புறங்களில் உள்ள சிற்றுண்டிச் சாலை, ஓட்டல் முதலியவைகளில் ஹரிஜனங்கள் தாராளமாக பிரவேசிக்க முடிவதில்லை. தனியாக ஹரிஜனங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பாத்திரங்கள் அத்தகைய ஓட்டல் சிற்றுண்டிச் சாலை முதலியவற்றில் வைக்கப்பட்டுள்ளன. இதை எவரேனும் மறுக்க முடியுமா இல்லை என்று? ஹரிஜனங்களை உள்ளே அனுமதித்தால் தங்கள் சிற்றுண்டிச் சாலைகளுக்கும், ஓட்டல்களுக்கும் மற்ற சமூகத்தினர் வரமாட்டார்கள் என்பதாலும், அதனால் தங்கள் வியாபாரத்திற்கு இடையூறு ஏற்படும் என்ற காரணத்தினாலும் எத்தனையோ முதலாளிகள், ஹரிஜனங்களுக்குச் சம அந்தஸ்து அளிக்க வேண்டுமென்று விருப்பம் இருந்தாலும், அதை வெளியே காட்ட முடியாமல் ஹரிஜனங்களைப் புறக்கணிக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களின் எண்ணம் நல்லதாக இருந்தாலும், அவர்களின் செய்கையைக் கண்டிக்கிறது இப்புதியச் சட்டம். அவர்களின் செய்கை இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படத் தக்க குற்றமாகிறது.

தீண்டாமையின் காரணமாக ஹரிஜனங்கள் எந்தவிதமான தொழில் செய்யவும், உத்தியோகம் பார்க்கவும், வியாபாரம் செய்யவும் முடியாமல் நீண்டகாலமாக தடை செய்யப்

பட்டு வருகிறுர்கள். இதுவே அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருப்பதோடு அவர்களை வறுமையிலாழ்த்தி அடிமைகளாக்கிவிட்டது. ஹரிஜனங்களுக்குத் தீண்டாமை இழைத்த மாபெரும் பாதகம் இதுதான். ஓரளவுக்கு முற்போக்கு சமுதாயத்தினர் முன்னேறுகிறுர்கள், முன்னேற முடிகிறது என்ருல் அவர்கள் தங்கள் விருப்பம் போல் எந்தத்தொழிலையும், வியாபாரத்தையும் செய்யமுடிகிறது. எந்த உத்தியோகமும் பார்க்க முடிகிறது. அவைகளுக் கெல்லாம் போதிய ஆதரவும் ஒத்துழைப்பும் சமுதாயத்தில் அவர்களுக்குத் தாராளமாகக் கிடைக்கின்றன. ஆனுல் ஹரிஜனங்கள் இவ்வித வசதிகள் ஒன்றும் இல்லாமல் எப்படி முன்னேற முடியும், பொருளாதாரத்துறையில் ? தொட்டால் தீட்டு, பார்த்தால் தீட்டு என்றகொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வரும் ஹரிஜனங்கள் எந்தத் தொழிலையும், வியாபாரத்தையும், உத்தியோகத்தையும் செய்து பொருளாதாரத் துறையில்முன்னேறுவதற்கு இச் சட்டம் இப்போழுதாவது உரிமையளிக்கின்றது. மேலும் மற்றவர்கள் உபயோகப் படுத்துவதற்கு உரிமை இருக்கும் ஆறு, ஓடை, ஊற்று, கிணறு, நீர்த்தொட்டி, தண்ணீர்க் குழாய் நீர்ப்பாய்ச்சுமிடம், குளிக்குமிடம், சுடுகாடு, பாதை, வழி, பொது ஜனங்கள் ஓய்வுபெறுமிடம் முதலியவற்றை ஹரிஜனங்களும் உபயோகிக்க உரிமை உடையவர்களாவார்கள் என்று இச்சட்டம் கூறுகின்றது. மாநில சர்க்கார் அளிக்கும் நிதியிலிருந்து பொது நோக்கத்திற்கும், தர்மத்திற்கும் ஓர் இடம் வைக்கப்பட்டிருந்தால் ஹரிஜனங்கள் அவற்றையும் உபயோகப் படுத்த முழு உரிமை உண்டு. பொதுமக்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட தரும நிதியின் நன்மைகளையும் அனுபவிக்கவும், இரயில், பஸ் போன்ற பிரயாணம் செய்யக்கூடிய எல்லா பொது வாகனங்களை உபயோகிக்கவும் அவர்களுக்கு உரிமை அளிக்கப்படுகின்றது.

தீண்டாமை ஒழிவதற்குச் சேரிகள் ஒழியவேண்டும். இது வரையில் ஹரிஜனங்கள் சேரிகளைவிட்டு, ஊர்ப் (உயர் சாதி வகுப்பினர் வசிக்கும்) பகுதிகளில் வசிப்பதற்கு முடியாமல் இருந்தது. ஆனால் இப்புதிய சட்டம் ஊர்ப் பகுதிகளில் ஹரிஜனங்கள் வசிப்பதற்கும், அங்கு குடிமனைகளை வாங்கி வீடுகட்டிக்கொள்ளவும், அவற்றை சொந்தமாக்கிக்கொள்ளவும் உரிமையளிக்கின்றது. தீண்டாமையின் காரணமாக சேரியில் வசிக்கும் ஒருவரை ஊரில் வசிக்க மறுத்தால் அது இச் சட்டத்தின் கீழ் குற்றமாகிறது. தீண்டாமைக் கிஞ்சித்தேனும் ஒழியாத கிராமப் பகுதிகளில் நம் நாட்டில் சட்டம் தரும் இந்தச் சலுகையை ஹரிஜனங்கள் அவ்வளவு எளிதில் அடைவது கஷ்டமாக இருந்தாலும், நாளடைவில் இது நன்மை பயக்கும் என்பதில் சந்தேகமில்லை. சட்ட பூர்வமாக—நடைமுறையில் இல்லாவிட்டாலும்—சேரிகளை ஒழித்துவிட்டார்கள் சர்க்கார் என்று கூறலாம்.

ஹரிஜனங்கள் சமுதாய, மத சம்பந்தமான வழக்கம் ஆச்சாரம், சடங்கு முதலியவற்றை அனுஷ்டிக்கவும் அல்லது மத சம்பந்தமான ஊர்வலத்தில் கலந்துகொள்ளவும், நகைகளையும் ஆடையாபரணங்களையும் உபயோகிக்கவும் இச் சட்டம் உரிமையளிக்கின்றது. இன்னும் எத்தனையோ கிராமங்களில் ஹரிஜனங்கள் நல்ல உடை உடுத்த முடியாமல் தடுக்கப்படுகிறார்கள். கால்கள் வரை வேஷ்டியைத் தொங்கவிட்டுக் கட்டவும், செருப்புகள் போட்டுக் கொண்டு நடக்கவும், குடை பிடித்துக் கொள்ளவும், பொதுவான வீதிகளில் நடக்கவும் தடை செய்யப்படுகிறார்கள். இந்த அநீதிகளிலிருந்து தப்பும் வகையறியாது ஹரிஜனங்கள் துன்பப் பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையில் இப்புதியச் சட்டம் அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கின்றது. சட்டத்தின் நாலாவது பிரிவில் கூறப்பட்டிருக்கும் இது சம்பந்தமான குற்றங்களை எவராவது செய்தால் அவர் ஆறுமாதம்வரை வெறுங்காவல் சிறை தண்டனை

யாவது, ஐநூறு ரூபாய்வரை அபராத தண்டனையாவது அல்லது இவ்விரண்டுவித தண்டனைகளுமாவது விதிக்கப் படத்தக்கவராவார்.

## வைத்திய சாலை, கல்வி ஸ்தாபனம் முதலியவற்றில் சேர்க்க மறுத்தால்?

போது ஜனங்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆஸ்பத்திரி, சிறு வைத்தியசாலை (Dispensary) முதலியவைகளிலும், கல்வி ஸ்தாபனங்களிலும் அவைகளுடன் சேர்ந்த மாணவர் உணவு விடுதிகளிலும் (Hostels) தீண்டாமையின் காரணமாக யாரையும் சேர்ப்பதற்கு மறுக்கக் கூடாது என்று இச் சட்டம் கூறுகிறது. அல்லது மேற் கூறிய ஸ்தாபனங்களில் சேர்ந்த பிறகு ஒருவருக்குப் பேதங்காட்டும் முறையில் எந்த விதமான காரியத்தைச் செய்தாலும் ஆறு மாதம்வரை வெறுங்காவல் சிறை தண்டனையாவது, ஐநூறு ரூபாய்வரையில் அபராத தண்டனையாவது அல்லது இருவித தண்டனைகளுமாவது விதிக்கப்படத் தக்கவராவர்.

## சாமான்கள் விற்கவும், சேவைகள் செய்யவும் மறுத்தால்?

தீண்டாமையின் காரணமாக ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த யாருக்கும் எந்தவிதமான சாமன்களை விற்க மறுத்தாலும், அல்லது சேவைகளைச் செய்ய மறுத்தாலும் அப்படி மறுக்கும் நபருக்கு இந்தச் சட்டம் மேற்கூறிய தண்டனையை விதிக்கிறது. கிராமப் புறங்களில் இன்றைக்கும் ஹரிஜனங்களுக்குச் சில கடைகளில் சாமான்கள் விற்க மறுக்கப்படுகின்றன. அல்லது சாமான்கள் விற்கப்பட்டாலும் ஹரிஜனங்கள் சாமான்கள் வாங்குவதற்கென்றே பிரத்தியேகமான இடமும் அம்மாதிரியான கடைகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இம் முறை

களை இந்தச் சட்டம் கண்டிக்கிறது. மேலும் பிற சாதியினர் களுக்கு வேலை செய்யும்—சலவை செய்தல், முடிதிருத்தல், வாத்தியம் வாசித்தல் போன்ற—தொழிலாளிகள் ஹரிஜனங்களுக்கு வேலைசெய்ய முன்வருவதில்லை. தீண்டாமைதான் இதற்கு அடிப்படையான காரணம். ஆகையால் இதையும் இச்சட்டம் கண்டிக்கிறது. மற்றவர்களுக்கு எந்த சமயம், இடம், நிபந்தனை முதலியவற்றில் சாமான்கள் விற்கப்படுகின்றனவோ, அல்லது சேவைகள் செய்யப்படுகின்றனவோ அதே சமயம் இடம் நிபந்தனை முதலியவற்றில் ஹரிஜனங்களுக்கும் சாமான்கள் விற்கப்பட வேண்டும், சேவைகள் செய்யப்பட வேண்டும் என்பதுதான் இச்சட்டத்தின் நோக்கம். இந்நோக்கம் நிறைவேறினுல் தீண்டாமை அறவே ஒழிக்கப்படுவதோடு, சமுதாயத்தில் புரட்சிகரமான, எல்லோரும் விரும்பத்தக்க ஒரு மாறுதல் உண்டாகும் என்பது திண்ணம். அப்பொழுதுதான் நம் நாட்டில் சாதி பேதமற்ற சமுதாயத்தைக் காணமுடியும். இந்த லட்சியத்தை அடைவதற்கு இப்புதியச் சட்டம் வழிகாட்டியாக இருக்கிறது. பொதுமக்கள்—எந்தச் சாதியாராயிருப்பினும்—இதை உணர்ந்து பணியாற்றல் நன்று.

## தீண்டாமையும் இந்திய அரசியல் அமைப்பும்

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இந்திய அரசியல் சட்டம் 17-வது பிரிவின்படி ஒழிக்கப்பட்ட தீண்டாமையின் காரணமாக கிடைத்திருக்கும் உரிமையை செலுத்துவதற்கு யாராவது தடை செய்தாலும், அல்லது அவ்வித உரிமையை எவரும் செலுத்தும் போதும், செலுத்தின பிறகும் தொந்தரவு செய்தாலும், தீங்கிழைத்தாலும் ஒதுக்கி வைத்தாலும் (Boycott) அப்படிச் செய்யும் நபருக்கு ஆறு மாதம்வரை வெறுங்காவல் சிறைதண்டனை யாவது, ஐநூறு ரூபாய்வரை அபராத தண்டனையாவது, அல்லது இவ்விரு தண்டனைகளுமாவது விதிக்கப்படும் என்று இச்சட்டம் கூறுகிறது. (சட்டத்தின் 7-வது பிரிவைப் பார்க்கவும்.)

புது டில்லியில் 1946-ம் ஆண்டு, டிசம்பர் மாதம், கூடிய அரசியல் நிர்ணய சபை (Constituent Assembly) இந்தியா வின் வருங்கால அரசியல் அமைப்பை வகுப்பதற்கு ஒரு சிறிய குழுவை (Drafting Committee) நியமித்தது. டாக்டர் B R. அம்பேத்கார் என்ற அறிஞரைத் தலைவராகக் கொண்ட இக்குழு இந்திய அரசியல் அமைப்பு நகல் ஒன்று தயாரித்து 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ம் தேதி அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பித்தது. அச்சபையாரால் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் அமைப்புதான் இன்று இந்தியாவின் அரசியல் அமைப் பாக விளங்குகிறது. இந்த அரசியல் அமைப்பு 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

## அடிப்படை உரிமைகள் (Fundamental Rights.)

இந்திய அரசியல் அமைப்பில் பல அடிப்படையான உரிமைகளைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்வுரிமை களைப்பற்றி குறிப்பிட்டிருக்கும் பகுதிதான் மிகவும் முக்கிய மானது என்று எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அமைப்பின் தற்கால வெற்றியும், வருங்கால முன்னேற்றமும் இவ்வுரிமைகள் பறிபோகாமல் காப்பாற்றப்படுவதில்தான் இருக்கின்றன என்று சொல்லலாம். அரசியல் அமைப்பில் 24 பிரிவுகள் இவ்வித அடிப்படையான உரிமைகளைப்பற்றி கூறு கின்றன. அவற்றில் 17-வது பிரிவு பின்வருமாறு கூறு கிறது:—

"தீண்டாமை ஒழிக்கப்பட்டிருக்கிறது. எந்தவிதமான ரூபத்திலும் அதைக் கடைப்பிடிப்பது தடை செய்யப்பட்டிருக் கிறது. தீண்டாமையின் காரணமாக அமுல் நடத்தப்படும் எந்தவிதமான தகுதியின்மையும் சட்டப்படி தண்டிக்கத்தக்க ஒரு குற்றமாகிறது."

எவரும் தீண்டாமையை எந்தவிதமான ரூபத்திலும் கையாள மற்றவர்களை எழுதிய அல்லது பேசிய சொற்களாலும் அடையாளத்தாலும், அபிநயத்தாலும், அல்லது வேறு எந்த விதத்தாலும் தூண்டினுல் மேற்கூறிய தண்டனைக்கு ஆளாவார்கள். (சட்டத்தின் 7-வது பிரிவைப் பார்க்கவும்)

ஹிந்து சமுதாயத்தில் ஹரிஜனங்கள் அல்லாத எத்தனையோ ஆயிரக்கணக்கான சாதிகளும், உபசாதிகளும் இருக்கின்றன. அவைகளைச் சேர்ந்த மக்களில் ஒரு சாதியார் மற்ருெரு சாதியாருடன் ஒற்றுமையாய் இருப்பதில்லை. விவாக சம்பந்தமும் சமபந்தி போஜனமும் இன்னும் இதர விஷயங்களும் அவர்களைச் சுலபமாக ஒற்றுமைப்படுத்த முடிவதில்லை. ஆனுல் தீண்டாமை ஒன்றுமாத்திரம் அவர்கள் அனைவரையும் ஒற்றுமைப் படுத்துகிறது. ஏனென்ருல் அவர்கள் எல்லோரும் எவ்வகுப்பினராயிருந்தாலும், தீண்டாமையைக் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை. இவ்விதமான ஒரு சமுதாய சூழ்நிலையில் ஒருவர் மற்ருெருவரைத் தீண்டாமையை அனுஷ்டிக்கத் தூண்டுவதும், அப்படி தீண்டாமையைக் கையாள மறுத்தவர்கள் சாதியிலிருந்து விலக்கப்படுவதும் வழக்கமாக இருந்து வருகிறது, நம் நாட்டில். இவைகள் எல்லாம் இனிமேல் இப்புதியச் சட்டத்திற்கு விரோதமானவைகளாகக் கருதப்படும்.

## ஒதுக்கிவைப்பது (Boycott)

ஒருவரை ஒதுக்கிவைப்பது பலவழிகளில் கையாளப்படலாம். ஒருவருக்கு வாடகைக்கு நிலம், வீடு முதலியவற்றை விடுவதற்கு மறுத்தால் அல்லது அவற்றை அவர் உபயோகிக்க மறுத்தால், அவரை ஒதுக்கி வைத்ததாகக் (Boycott) கருதப்படும். மேலும் அவருடன் பழகவும் அவருக்காக வேலை செய்யவும் வாடகைக்குப் பெறவும் அல்லது அவரிடமிருந்து வாடிக்கையான தொழிலை ஏற்றுக் கொள்ளவும் அல்லது அவருக்கு வாடிக்கையான தொழில்

செய்யவும் மறுத்தால் அவரை ஒதுக்கி வைத்ததாகக் கருதப்படும். அவருடன் சாதாரணமாக வைத்துக்கொள்ளும் சமூக, தொழில், வியாபாரத் தொடர்புகளை விட்டு விட்டாலும் அவரை ஒதுக்கி வைத்ததாகவே இச்சட்டம் கூறுகிறது.

வேரூன்றிய சாதிப் பிரிவினைகள் உள்ள நம் நாட்டில், பழக்க வழக்கங்களுக்கும், சாதி ஆசாரங்களுக்கும் மாருக எவராவது நடந்தால், அவரை ஒதுக்கிவைப்பது வழக்கமாக இருந்து வருகிறது தீண்டாமையைக் கையாளுவது என்பது ஹரிஜனங்கள் அல்லாத மற்ற எல்லா சாதியினருக்கும் பழக்கம் மாத்திரம் அல்ல, சாதி ஆசாரமாகவே நீண்ட நெடுங்காலமாக இருப்பதையும் தீண்டாமையைக் கடைப்பிடிக்க மறுப்பது இந்த ஆசாரத்திற்கு விரோதமானதாகக் கருதப்படுவதையும், ஆகவே இதனுல் எத்தனையோ பேர் சாதிக் கட்டுப்பாடு செய்யப்பட்டு (Ex-cummunication) துன்பப்படுத்துவதையும் சாதாரணமாகக் காணலாம். இவையெல்லாம் இனிமேல் இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களாகின்றன.

## லைசன்சுகள் ரத்து செய்யப்படும்.

இச் சட்டத்தின் 6-வது பிரிவில் தீண்டாமை காரணமாக எவராவது அன்றுடத் தொழில் முறைகளுக்கிணங்க மற்றவர்களுக்குச் சாமான்கள் விற்பதைப் போலவும், அல்லது சேவை செய்வதைப் போலவும் அதே காலம், இடம், நிபந்தனைப் படியும் விற்கவோ அல்லது சேவை செய்யவோ மறுத்தால் அவருக்கு ஆறுமாதம்வரை சிறை தண்டனையோ ஐநூறு ரூபாய் வரையில் அபராத தண்டனையோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம் என்று முன்பே கூறப்பட்டது. அப்படி தண்டிக்கப்பட்ட ஒருவர் குற்றம் செய்யப்பட்ட தொழில், வியாபாரம், உத்தியோகம் சம்பந்தமாய் ஒரு லைசன்சு வைத்திருந்தால் அக்குற்றத்தை விசாரிக்கும் கோர்ட்டு அவருக்கு அந்தப் பிரிவின் கீழ் ஏற்படக்கூடிய, வேறுவித தண்டனைக்கு

இடையூறு இல்லாமல் அந்தக் கோர்ட்டு அபிப்பிராயப் படுகிற காலத்திற்கு அந்த லைசன்சை ரத்து செய்யவோ, அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ உத்திரவிடலாம். இப்படி ஒரு கோர்ட்டு லைசென்சை ரத்து செய்யும் உத்திரவு, முறைப்படி ரத்து செய்யும் அதிகாரியின் உத்திரவைப் போல் கருதப்படும்.

பலவிதமான வியாபாரங்கள் செய்ய வேண்டுமானால் சட்டப்படி லைசென்சு (அனுமதி) பெற்றுதான் செய்ய வேண்டியிருக்கிறது. உதாரணமாக பலசரக்குக்கடைகள், ஜவுளிக் கடைகள், எண்ணெய் வியாபாரம், இரும்பு சாமான்கள் வியாபாரம் போன்றவை எல்லாம் லைசென்சுகள் இல்லாமல் நடத்த முடியாது. அதைப்போலவே தொழில்களும். சலவைத் தொழில் (Laundry) முடிதிருத்தும் நிலையங்கள் (Hair Dressing saloons) போன்ற எல்லாத் தொழில்களுக்கும் லைசென்சு பெற வேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்படி லைசென்சுகள் பெற்று வியாபாரம் செய்பவர்களும், தொழில் செய்பவர்களும் தீண்டாமையை அனுஷ்டிக்க வொட்டாமல் தடை செய்வதற்கு அவர்களின் லைசென்சுகளை ரத்து செய்யவும், அல்லது தற்காலிகமாக நிறுத்திவைக்கவும் கோர்ட்டுகளுக்கு இச்சட்டம் அதிகாரமளிக்கின்றது என்றால் இச்சட்டத்தின் உண்மையான நோக்கம் நன்கு விளங்குகின்றது. தீண்டாமையை நடைமுறையிலிருந்து அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதுதான் இச் சட்டத்தின்-அரசாங்கத்தின்-அடிப்படையான நோக்கம் என்பது வெள்ளிடைமலை.

## அரசாங்கம் கொடுக்கும் மான்யம் (Grant)

நம் நாட்டில் பொதுஜன ஆராதனைக்காக அமைக்கப்பட்டிருக்கும் எத்தனையோ இடங்கள் அரசாங்கத்திடமிருந்து மான்யங்கள் பெற்றுள்ளன. அவைகள் பணமாகவும் இருக்கலாம், அல்லது நிலமாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட ஆராதனை இடங்களின் நிர்வாகஸ்தரோ அல்லது தருமகர்த்

தாவோ இச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப் பட்டால் அந்தத் தண்டனை அப்பீல் மூலமாகவும், ரிவிஷன் மூலமாகவும் ரத்து செய்யப்படாவிட்டாலும் அல்லது திருப்பப் படாவிட்டாலும் சர்க்கார் தங்கள் அபிப்பிராயத்தில் அந்த நட வடிக்கைத் தகுதியானதென்று தெரிந்தால் அம்மாதிரியான மான்யம் முழுமையுமோ அல்லது ஒரு பகுதியையோ திரும்பப் பெறவும் அல்லது தற்காலிகமாக ரத்து செய்யவும் உத்திர விடலாம். சட்டத்தை அனுசரிக்கும் விஷயத்தில் சர்க்கார் போது மக்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டியது அவசியமல்லவா? எனவே அரசாங்க மான்யம் பெற்ற போது ஜன ஆராதனை இடங்களின் நிர்வாகஸ்தர்கள் இச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டால் அத்தண்டனை அப்பீல் மூலமும் ரிவி ஷன் மூலமும் ரத்து செய்யப்படாவிட்டால் அல்லது மாற்றப் படாவிட்டால் இச்சட்டத்தின் 9-வது பிரிவின் கீழ் கூறப்படும் நடவடிக்கையை கடுமையாக அமுலுக்குக் கொண்டுவர சர்க் கார் தயங்கக் கூடாது. அப்படிச்செய்தால் போதுஜன ஆரா தனை இடங்களில் அனுஷ்டிக்கப்படும் தீண்டாமை வெகு சுல பத்தில் ஒழிக்கப்படும். போதுமக்களுக்கும் அது ஒரு எடுத்துக் காட்டாகவும், படிப்பினையாகவும் இருக்கும். நகரங்களைவிட கிரா மாந்தரங்களில் தான் போதுஜன ஆராதனை இடங்களில் தீண் டாமைக்குற்றங்கள் பெரும்பாலும் செய்யப் பட்டு வருகின்றன. இக்காலத்தில். அக்குற்றங்களைக்கண்டு பிடித்து தக்கத்தண்டனை விதிப்பதற்குச் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுப்பது விரும்பத் தக்கது.

## குற்றம் செய்யத்தூண்டுதல் (Abetment)

சட்டத்தின் 10-ம் பிரிவுப்படி எந்தக் குற்றத்தையும் செய் வதற்கு எவராவது தூண்டுதலாக இருந்தால், அந்தக் குற்றத் திற்காக விதிக்கப்படும் தண்டனை அவருக்கும் விதிக்கப்படலாம். ஒரு குற்றத்தைச் செய்பவருக்கு இருக்கும் பொறுப்புதான் அக்குற்றத்தைச் செய்தவரைத் தூண்டியவருக்கும் அளிக்கப்பட் டிருக்கின்றது. எனவேதான் குற்றத்திற்கு விதிக்கப்பட்டுள்ள

தண்டனையை இச்சட்டம், தூண்டுதல்களுக்கும் விதிக்கிறது. உதாரணமாக, இச்சட்டத்தின் கீழ் செய்யப்படுங் குற்றங்களுக்குப் பெரும்பாலும், ஆறுமாதம் வரை வெறுங்காவல் சிறை தண்டனையோ, ஐநூறு ரூபாய் வரை அபராத தண்டனையோ, அல்லது இரண்டுமோ விதிக்கப்பட்டிருக்கின்றன. இதே தண்டனையைத்தான் இச்சட்டம் அக்குற்றங்களைச் செய்யத் தூண்டியவர்களுக்கும் கொடுக்கின்றது.

பிறர் தூண்டுதல் இல்லை என்றால் எவ்வளவோ குற்றங்கள் நாட்டில் நடைபெற முடியாது. குற்றஞ் செய்யும் ஒருவருக்கு மற்றவர் உதவி செய்தாலும், ஊக்கமளிப்பதாலும், குற்றங்கள் சுலபமாகச் செய்யப்படுகின்றன. ஆகவே குற்றவாளிக்கு விதிக்கும் தண்டனையை, தூண்டுபவருக்கும் உடந்தைக்கும் விதிப்பதால் பெரும்பான்மையாகக் குற்றங்கள் நிகழாவண்ணம் தடுப்பதற்கு ஏதுவாகும். இந்தியன் பீனல் கோடு, 5-வது அத்தியாயத்தில் தூண்டுதலைப்பற்றி விவரமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றது.

## மீண்டும் தண்டிக்கப்பட்டால் தண்டனை உயர்வு

எவராவது இச்சட்டத்தின் கீழ் எக்குற்றத்திற்காவது; அல்லது எக்குற்றத்தையும் செய்ய உடந்தையாய் இருந்ததற்காவது ஒரு தடவை தண்டிக்கப்பட்டு, மீண்டும் அதே குற்றத்திற்குத் தண்டிக்கப்பட்டால் அவருக்குச் சிறை தண்டனையும், அபராத தண்டனையும் சேர்த்து விதிக்கப்படும் என்று இச்சட்டம் கூறுகிறது. (11-ம் பிரிவைப் பார்க்கவும்) தீண்டாமையின் காரணமாக மீண்டும் குற்றங்கள் செய்யப்படாமல் தடுப்பதற்கு இப்பிரிவு மிகவும் அனுகூலமாய் இருக்கிறது. ஏற்கனவே செய்த குற்றத்தைத் திரும்பவும் ஒருவர் செய்தால் அதிகப்படியான தண்டனை விதிப்பதன் மூலம் அவருக்கு நல்ல பாடங்கற்பிப்பதுடன் பிறரும் அம்மாதிரி நடந்து கொள்ளாவண்ணம் தடுப்பதற்குச் சாதகமாய் அமைந்துள்ளது இச்சட்டத்தின் 11-வது பிரிவு.

அதற்கு மாருக, ஒரே குற்றத்தைத் திரும்பவும் செய்யும் ஒரு நபருக்கு ஒரே விதமான தண்டனையை மீண்டும் விதித்தால், அதனுல் அவருக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டத்தில் யாதொரு வித்தியாசமும் தெரியாது. எனவே குற்றத்தை எத்தனை தடவை வேண்டுமானுலும் தங்குதடை இல்லாமல் செய்வதற்கு அவர் பின்வாங்கமாட்டார். இதை உத்தேசித்துதான் இப்பிரிவுஅதிகப் படியான தண்டனையை விதிக்கின்றது.

## சிலவழக்குகளில் கோர்ட்டின் அனுமானம்
## (Presumption)

இந்திய அரசியல் சட்டத்தில் 366-வது பிரிவு 24-வது ஷரத்தில் " ஷெட்யூல்டு வகுப்புகள்'' என்பதற்குப் பின்வரும் விளக்கம் தரப்பட்டுள்ளது :—" ஷெட்யூல்டு வகுப்புகள்'' என்ருல் இந்த அரசியல் அமைப்பின் நோக்கங்களுக்காக 341-வது பிரிவின் கீழ் கருதப்படும் சாதி, வமிசம், குலமோ அல்லது அம்மாதிரியான சாதி, வமிசம், குலம் என்பவற்றின் உட்பகுதிகளோ அல்லது கூட்டங்களோ ஆகும்.

[அரசியல் அமைப்பின் 341-வது பிரிவில் இந்திய ஜனுதிபதி, முதலாவது ஷெடியூலில் இருக்கும் A, B. ராஜ்யங்களில் உள்ள கவர்னரையோ அல்லது ராஜபிரமுக்கையோ கலந்து, பகிரங்க அறிக்கையின் மூலம் எந்த ராஜ்யத்திலும் உள்ள சாதிகள், வமிசங்கள், குலங்கள் அல்லது அவற்றின் உட்பகுதிகள் அல்லது கூட்டங்களை வரையறுத்து இந்த அரசியலமைப்பின் நோக்கங்களுக்காக ஷெட்யூல்டு வகுப்பினர் எனக் கூறலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது]

அப்படிக் குறிப்பிடப் பட்டிருக்கும் ஷெடியூல்டு சாதிகளைச் சேர்ந்த ஒருவர் சம்பந்தமாய் இச்சட்டத்தின் கீழ் குற்றமென்று கருதப்படும் எக்காரியமாவது செய்யப்பட்டால் கோர்ட்டில்

அதற்கு மாருக நிரூபிக்கப்பட்டாலொழிய, அக்காரியம் தீண்டாமைக் காரணமாக செய்யப்பட்டது என்று கோர்ட்டு அனுமானித்துக்கொள்ளும்.

இதர குற்றங்களில் குற்றவாளி என்று நிரூபிக்கும் பொறுப்பு (Burden of Proof) வாதியைச் சார்ந்த அவற்றில் குற்றவாளி நிரபராதி என்று கோர்ட்டு அனுமானித்துக்கொள்ளும். ஆனல் இச்சட்டத்தின் கீழ்வருங் குற்றங்களில் ஷெடுயூல்டு வகுப்பினரின் சம்பந்தமாய் செய்யப்பட்ட குற்றங்கள் தீண்டாமையின் காரணமாக செய்யப்பட்டன என்று கோர்ட்டு அனுமானித்துக் கொள்ளும். தான் தீண்டாமையின் காரணமாக குற்றம் செய்யவில்லை என்று நிரூபிக்கும் பொறுப்பு குற்றவாளியைச் சார்ந்தது என்ற விஷயம் குறிப்பிடத்தக்கது. (சட்டத்தின் 12-ம் பிரிவைப் பார்க்கவும்)

## சிவில் கோர்ட்டுகளின் அதிகார வரம்பு (Jurisdiction)

எந்த சிவில் கோர்ட்டும், இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு முரணுகவுள்ள எந்த வழக்கையும் நடவடிக்கையையும் ஏற்றுத் தொடர்ந்து நடத்தாது. முரணுகவுள்ள எந்தத் தீர்ப்புங்கூருது, உத்திரவும் போடாது. அல்லது அவ்விதமான டிக்கிரி, உத்திரவு முதலியவற்றைக்கூட நிறைவேற்ருது. அதைப்போலவே எந்த சிவில் கோர்ட்டும் எந்த தீர்ப்பையும், உத்திரவையும், நிறைவேற்றும்போது ஒருவர்மேல் தீண்டாமையின் காரணமாக தடைகளை உண்டாக்கும் வழக்கத்தையும் ஆசாரத்தையும் ஒப்புக்கொள்ளாது.

சுருங்கச் சொல்லின், சிவில் கோர்ட்டுகள் தீண்டாமையை அனுசரித்து செயலாற்ற இச்சட்டம் தடை விதிக்கிறது. அதாவது தீண்டாமையால் ஏற்படும் தகுதியின்மைகளை தங்கள் உத்திரவுமூலம் பிறப்பிக்கவோ அல்லது அவ்வுத்திரவு, தீர்ப்பு முதலிய வற்றை நிறைவேற்றவோ, எந்த சிவில்

கோர்ட்டுக்கும் அதிகாரம் இல்லை என்று இச்சட்டத்தின் 12-ம் பிரிவு கூறுகிறது. பொதுவாக சிவில் கோர்ட்டுகளின் அதிகார வரம்பைப் பற்றி 1908-ம் வருஷத்திய சிவில் புரோசிஜர் கோடில் (Civil Procedure Code) 9-ம் பிரிவில் கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. வெளிப்படையாகவோ அல்லது உத்தேசமாகவோ தடை செய்யப்பட்ட வழக்குகள் தவிர மற்ற எல்லா வழக்குகளையும் விசாரிக்க சிவில் கோர்ட்டுக்கு அதிகார வரம்பு உள்ளது என்று அப்பிரிவு கூறுகிறது. அதன்படி பார்த்தாலும் தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் அதனுடைய விதிகளுக்கு மாறுபட்ட வழக்குகளை விசாரிக்க எந்த சிவில் கோர்ட்டும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று வெளிப்படையாகவே தடை செய்கிறது.

## கம்பெனிகள் குற்றம் செய்தால்?

தீண்டாமை (குற்றங்கள்) சட்டத்தின் கீழ் குற்றம் செய்தது ஒரு கம்பெனியாக இருந்தால், குற்றம் செய்யப்பட்ட சமயத்தில் கம்பெனியைத் தன் பராமரிப்பில் வைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவர் பேரிலும், அந்தக் கம்பெனியின் நிர்வாக பொறுப்புள்ளவர்கள் பேரிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படி தண்டிக்கப்படுவர். அதாவது, ஒரு கம்பெனி செய்யுங் குற்றத்திற்கு அக்கம்பெனியைச்சேர்ந்தவரும் அதை நடத்துபவருந்தான் பொறுப்பாளிகள் என்று இச்சட்டத்தின் 14-ம் பிரிவு கூறுகிறது. ஆனால் அக்கம்பெனியைச் சேர்ந்தவர்களும்அல்லது நிர்வாகஸ்தர்களும் இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டக் குற்றம் தங்களுடைய அறிவுக்குப் புறம்பாக நடந்ததாகவும், அக்குற்றம் நிகழாமல் இருக்க எல்லா விதமான முயற்சியும் எடுத்துக் கொண்டதாகவும் நிரூபித்தால் அவர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள். மேலும் கம்பெனியின் டைரக்டர்,மானேஜர், காரியதரிசி அல்லது வேறு உத்தியோகஸ்தரின் அனுமதியினுல் குற்றம் நடந்தால் அவர்கள் சட்டப்படி

தண்டிக்கப்படுவார்கள் என்பதை இச்சட்டத்தின் 14 (2) வலி யுறுத்துகிறது. கூட்டுச் சங்கம், கூட்டு வியாபாரம், தனிப்பட்ட வர்களின் சங்கம் முதலியவற்றை "கம்பெனி" உட்படுத்தும் என்று இந்தப்பிரிவில் விளக்கப்பட்டிருக்கிறது.

## இச்சட்டத்தின் கீழ்வரும் குற்றங்கள் அறியக் கூடியவை (Cognizable) சமாதானம் செய்து கொள்ளக்கூடியவை (Compoundable)

1898-ம் வருஷத்திய குற்ற நடவடிக்கைச் சட்டத்தில் (Criminal procedure Code) கூறி இருப்பவை எதுவாக இருப்பினும்—

(a) இச்சட்டத்தின் கீழ் வரும் ஒவ்வோரு குற்றமும் அறியத்தக்கது (Cognizable)

(b) கோர்ட்டினுடைய அனுமதியின்மேல் சமாதானம் செய்து கொள்ளக் கூடியது (Compoundable)

1898-ம் ஆண்டின் குற்ற நடவடிக்கைச் சட்டத்தின் 4 (F) ல் அறியக் கூடிய குற்றம் (Cognizable offence) என் பதற்கு பின்வருமாறு அர்த்தம் கூறப்பட்டுள்ளது:—

"அறியக்கூடிய குற்றமென்றால் ஒரு குற்றத்திற்காக வும், அறியக்கூடிய வழக்கென்றால் ஒருவழக்கிலும் ஒரு போலீஸ் அதிகாரி, இராசதானி தலைநகரங்களின் உள்ளும், புறமும், இரண்டாவது ஷெட்யூலில் உள்ளபடியாவது அல் லது தற்சமயம் அமுலில் இருக்கும் எந்த சட்டப்படியாவது வாரண்ட் இல்லாமல் கைது செய்யலாம்."

ஆகவே தீண்டாமை (குற்றங்கள்) சட்டத்தின் கீழ் வரும் குற்றங்களெல்லாம் அறியக்கூடிய குற்றங்களென்றால் போ லீஸ் அதிகாரிகளால் வாரண்ட் இல்லாமல் கைது செய்யப்படக் கூடிய குற்றங்கள் என்று பொருள். குற்றநடவடிக்கைச் சட் டத்தில் (Criminal procedure code) கொலை, களவு,

கொள்ளை என்பன போன்ற பெரிய குற்றங்களுக்காகத்தான் அக்குற்றங்களைச் செய்த நபர்களை வாரண்ட் இல்லாமல் எந்த போலீஸ் அதிகாரியும் கைது செய்யலாம் என்று குறிப்பிடப் பட்டு இருக்கிறது. அதைப்போலவே இச்சட்டத்தின்கீழ் செய்யப் படும் தீண்டாமைக் குற்றங்களுக்காக வாரண்ட் இல்லாமல் போலீஸ் அதிகாரிகள் கைதுசெய்யலாம் என்று கூறப்பட்ட காரணத்தால் இனிமேல் தீண்டாமைக் குற்றங்களும் பெரிய குற்றங்களாக மதிக்கப்படுகின்றன என்பது கவனிக்கத்தக்கது. கோர்ட்டின் அனுமதியின்மேல் இக்குற்றங்களைச் செய்த நபர்கள் சமாதானம் செய்து வைக்கப்படலாம். அதாவது குற்றம் செய்தவரும் (accused) குற்றம் செய்யப்பட்டவரும் (Complainant) கோர்ட்டாரின் அனுமதியின் மேல் வழக்கை மேல் நடத்தாமல் சமாதானமாகப் போகலாம் என்றும் இச்சட்டத்தின் 15 (b) யில் கூறப்பட்டுள்ளது.

## இந்தச்சட்டம் மற்ற சட்டங்களைப் புறக்கணிக்கும்

எந்த விதமான சட்டமும், வழக்கமும் ஆசாரமும் இச்சட்டத்தின் ஷரத்துக்களுக்கு முரணானவைகளாக இருந்தால் இந்தச்சட்டத்தின் ஷரத்துக்களுக்குத்தான் வன்மையுண்டு அதாவது முரண்பட்ட எச்சட்டமும், பழக்கமும், ஆசாரமும் இச்சட்டத்தின்முன் செல்லத் தகாதவைகளாகிவிடும். பழைய சட்டங்களையும், வழக்கங்களையும் ஆசாரங்களையும் காண்பித்து இச்சட்டத்தையும் அதன் ஷரத்துக்களையும் மீறமுடியாது என்பது வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது.

## ரத்து செய்தல்

நம் நாட்டின் பலராஜ்யங்களில் ஆலயப் பிரவேச சட்டமும் சமுதாயதகுதி இன்மைகளை நீக்கும் சட்டமும் அமுலில் இருந்து வந்தன. அவைகளை இச்சட்டத்தின் ஷெட்யூலில் பார்க்கலாம். அந்தச் சட்டங்களிலுள்ள ஷரத்துக்களுக்கும், தீண்டாமை (குற்

றங்கள்) சட்டத்திலுள்ள ஷரத்துகளுக்கும் எந்த அளவுக்கு ஒற்றுமையும், முரண்பாடும் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு மேற்கூறிய ஷெட்யூலில் உள்ள சட்டங்கள் ரத்து செய்யப் படும்.

# சட்டத்தின் விவரம் :-

## 1955-ம் ஆண்டு தீண்டாமை (குற்றங்கள்) சட்டம்

1955-ம் ஆண்டில் இயற்றப்பட்ட 22-வது சட்டம்

தீண்டாமையைக் கடைப்பிடிப்பதற்கும், அதனுல்ஏற்படும் சமுதாய தகுதியின்மைகளை அமுல் நடத்துவதற்கும் அதன் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கும் தண்டனை விதிப்பதற்கான சட்டம்.

இந்தியக் குடியரசின் ஆருவது ஆண்டில் பார்லிமென்டினுல் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாக:-

### பீடிகை

1. **பெயர், வியாபகம், ஆரம்பம்:**– (1) இந்தச் சட்டம் 1955-ம் வருஷத்திய தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் எனப் பெயர் பெறும். (2) இந்தச்சட்டம் இந்தியா முழுவதிலும் வியாபிக்கும். (3) மத்திய சர்க்கார் அதிகார பூர்வமான கெஜட்டில் எந்த தேதியை நியமிக்கிருர்களோ அந்தத் தேதியில் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும். *

2. **அர்த்தம்:**– இந்தச்சட்டத்தில் சந்தர்ப்பத்திற்கு வேறு பொருள் தேவைப்படுவதாக இருந்தாலன்றி,

(a) "ஒட்டல்" என்பது சிற்றுண்டிச்சாலை உண்வு விடுதி, தங்கும் விடுதி, காப்பிக் கடை, பலகாரக் கடை, முதலியவைகளை உட்படுத்தும்.

(b) "இடம்" என்பது வீடு, கட்டடம், கூடாரம், நீரில் செல்லும் வாகனம் முதலியவற்றை உட்படுத்தும்.

---

* *1-6-55 முதல் அமுலாக்கப்பட்டது.*

(c) "பொழுது போக்கும் பொதுவான இடம் என்பது வேடிக்கைக் காட்டப்படுவதும், பொதுமக்கள் அனுமதிக்கப் படுவதுமான எல்லா இடங்களை யும் உட்படுத்தும்.

**விளக்கம் :-** "வேடிக்கை" என்பது எல்லா கண்-காட்சிகளையும், எல்லா ஆட்டங்களையும், விளையாட்டுகளையும் இன்னும் மற்ற எல்லாவிதமான பொழுது போக்கையும் உட் படுத்தும்.

(d) "பொதுவாக தொழும் இடம்" என்ருல் பொதுவாக மத வழிபாட்டிற்கு உபயோகப் படுத் தப்படும் இடம், எந்தப் பெயரால் வழங்கினுலும் அல்லது அந்த இடம் எந்தவித மதச் சடங்கு களையோ, பிரார்த்தனைகளையோ செய்வதற்கு ஒரு மதத்தைத் தழுவுகின்றவர்களுக்கோ ஒரு மதப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கோ, அல் லது அதன் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கோ அந்த இடம் அர்ப்பணிக்கப்பட்டிருந்தாலும், அல் லது அவர்களால் உபயோகிக்கப்பட்டிருந்தாலும் என்று பொருள்படுவதோடு அம்மாதிரியான இடத்திற்கு இணைக்கப் பட்டிருக்கும் அல்லது அடுத்து இருக்கும் எல்லா நிலங்களையும் உத வியான கோயில்களையும் உட்படுத்தும்.

**"கடை"** என்ருல் சாமான்கள் மொத்தமாகவோ அல் லது சில்லறையாகவோ, அல்லது மொத்தமாகவும், சில்லறையாக வும் எந்த இடத்தில் விற்கப்பட்டாலும் அவ்விடம் "கடை" என்று பொருள்படும். "கடை" என்பது சலவைத்தொழில் செய்யுமிடம், முடிதிருத்தும் நிலையம் இன்னும் வாடிக்கைக்காரர் களுக்கு எங்கெங்கு சேவை செய்யப்படுகின்றனவோ அவை களை எல்லாம் உட்படுத்தும்.

**3. மத சம்பந்தமான தகுதியின்மைகளை அமுல் நடத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை**

(a) யாராவது தீண்டாமையின் காரணமாக எந்த நபரையாவது, எந்த மதத்தைத் தழுவுகின்றவர்களும், எந்த மதப் பகுதியைச் சேர்ந்தவர்களும், அதன் பிரிவைச் சேர்ந்தவர்களுமான மற்றவர்கள் அனுமதிக்கப்படும் எந்தப் பொதுவான தொழுகைச் செய்யும் இடங்களிலும் நுழைய வொட்டாமல் தடுத்தாலும், அல்லது,

(b) அதே மதத்தைத் தழுவுகின்றவர்களும், அதே மதப் பகுதியைச் சேர்ந்தவர்களும், அதன் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுமான மற்றவர்கள் அனுமதிக்கப்படும் அதே முறையில், அந்த அளவுக்குத் தொழுகைச் செய்யவும், பிரார்த்தனைச் செய்யவும், மதவழிபாடு செய்யவும், புண்ணிய குளம், கிணறு, ஊற்று, நீரோட்டம், முதலியவற்றில் குளிப்பதற்கும் அவற்றின் நீரை உபயோகிப்பதற்கும் தடை செய்தாலும், ஆறுமாதம் வரையில் வெறுங்காவல் சிறை தண்டனையாவது, ஐநூறு ரூபாய் வரையில் அபராத தண்டனையாவது அல்லது இவ்விரு தண்டனைகளுமாவது விதிக்கப்படத்தக்கவராவர்.

**விளக்கம் :—** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காகவும், 4-வது பிரிவின் நோக்கங்களுக்காகவும், புத்தமதம், ஜைனமதம், அல்லது சீக்கிய மதத்தைச் சேர்ந்த நபர்களும், வீரசைவர்கள், லிங்காயத்துகள், ஆதிவாசிகள், பிரம்ம சமாஜம், பிரார்த்தனைச் சமாஜம், ஆரிய சமாஜம் அல்லது சுவாமி நாராயண சம்பரதியைச் சேர்ந்தவர்கள் உட்பட ஹிந்துமதத்தின் அமைப்புகளில், அல்லது விரிவுகளில் எதையாவது தழுவுகின்றவர்கள் ஹிந்துக்களாகக் கருதப்படுவார்கள்.

**4. சமுதாயச் சம்பந்தமான தகுதியின்மையை வற்புறுத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை**

(i) எல்லா கடைகளிலும், போதுவான சிற்றுண்டிச் சாலை, ஓட்டல், அல்லது உல்லாசமாகப் பொழுது போக்கும் போது விடங்களிலும் பிரவேசிக்கவும் அல்லது,

(ii) போதுவான சிற்றுண்டிச்சாலை, ஓட்டல், தர்ம சாலை, சத்திரம், சாரை, முசபர்கானு முதலிய வைகளில் போதுமக்களின் உபயோகத்திற்காகவும், ஒரு மதத்தைத் தழுவுகின்ற நபர்கள், அதே மதத்தின் பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லது அதன் பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் உபயோகத்திற்காகவும், வைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களையும், இதர சாமான்களையும், உபயோகிக்கவும் அல்லது,

(iii) எந்த விதமான தொழில், உத்தியோகம், வியாபாரம், கோள்வினை, விற்பனை, முதலியவைகளைச் செய்வதற்கும்,

(iv) எந்தவிதமான ஆறு, ஓடை, ஊற்று, கிணறு, நீர்த்தோட்டி, தண்ணீர் குழாய், நீர்பாய்ச்சுமிடம், குளிக்குமிடம், புதைக்கும் அல்லது கொளுத்தும் சுடுகாடு, சுகாதார வசதி இடங்கள், பாதை, வழி, எல்லா போதுஜன புகலிடம் முதலியவற்றை போதுமக்களும், அல்லது ஒரே மதத்தைத் தழுவுகின்ற நபர்களும், அதே மதப் பகுதியைச் சேர்ந்தவர்களும், அதன் பிரிவைச் சேர்ந்தவர்களும் உபயோகப்படுத்தவும், அவற்றில் பிரவேசிக்கவும் உரிமை இருப்பதைப் போல் உபயோகிக்கவும் பிரவேசிக்கவும்,

(v) எந்த விதமான இடமும், தர்மத்திற்கோ அல்லது போது நோக்கத்திற்கோ உபயோகப்படுத்து வதற்கு மாநில நிதியிலிருந்து முழுமையும் அல்லது ஒரு பகுதி மான்யத்தால் நிர்வகிக்கப் பட்டு, போதுமக்களின் உபயோகத்திற்கும் ஒரே மதத்தைத் தழுவுகின்ற நபர்கள், அதே மதத்தின் பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லது அதன் பிரிவைச் சேர்ந்தவர்களின் உபயோகத் திற்கும் அர்ப்பணிக்கப்பட்டிருந்தால் அவற் றைப் பயன் படுத்தவும், அவற்றில் பிரவேசிப் பதற்கும்,

(vi) போதுமக்களின் நன்மைக்காகவும், அல்லது ஒரே மதத்தைத் தழுவுகின்ற நபர்கள், அதே மதத்தின் பகுதியைச் சேர்ந்தவர்கள், அதன் பிரி வைச் சேர்ந்தவர்களின் நன்மைக்காகவும் ஏற் படுத்தப்பட்ட தரும நிதிகள் அளிக்கும் நன்மை களை அனுபவிக்கவும்,

(vii) போதுவான வாகனங்களில் பிரவேசிக்கவும், அவற்றை உபயோகிக்கவும்,

(viii) எந்த இடத்திலும் குடி இருப்பு மனைகளில் வீடு கட்டுவதற்கும், அவற்றை சோந்தமாக்கிக் கோள்வதற்கும். அனுபவிப்பதற்கும்,

(ix) போது மக்களும் ஒரே சமயத்தைத் தழுவுகின்ற வர்களும் அதே மதப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லது அதன் பிரிவைச் சேர்ந்தவர்களும் அனுமதிக்கப்படுகிற எந்த தர்ம சாலையையும் சாரை, முசபர்கானவையும் உபயோகிக்கவும்,

(x) சமுதாய, மதச்சம்பந்தமான வழக்கம், ஆசாரம், சடங்கு முதலியவற்றை அனுஷ்டிக்கவும்

அல்லது மதச் சம்பந்தமான ஊர்வலத்தில் கலந்து கொள்ளவும், நகைகளையும் நேர்த்தி யான ஆடை ஆபரணங்களையும் உபயோகிக் கவும்,

யாராவது எந்த நபருக்கும் விரோதமாகவும் தீண்டா மையின் காரணமாகவும் எந்த விதமான தகுதியின்மையை யாவது வற்புறுத்தினுல் ஆறுமாத வெறுங் காவல் சிறை தண்டனையாவது ஐநூறு ரூபாய் வரை அபராத தண்டனை யாவது அல்லது இவ்விரண்டுவித தண்டனைகளுமாவது விதிக்கப் படத்தக்கவராவர்.

**5. வைத்திய சாலை முதலியவைகளில் அனுமதிக்க மறுப்பதற்கு விதிக்கப் பட்டுள்ள தண்டனை.**

(a) யாராவது தீண்டாமையின் காரணமாக போது ஜனங்களின் அல்லது அவர்களின் எந்தப்பகுதிக் காவது ஏற்படுத்தப் பட்டு நிர்வகிக்கப்பட்டு வரும் ஆஸ்பத்திரி, சிறு வைத்தியசாலை, கல்வி ஸ்தா பனம் அல்லது அத்துடன் இணைக்கப் பட்டிருக் கும் உணவு விடுதி முதலியவற்றில் எந்த நபரை யாவது சேர்ப்பதற்கு மறுத்தாலும் அல்லது,

(b) மேற்கூறிய ஸ்தாபனங்களில் சேர்ந்த பிறகு அந்த நபருக்கு விரோதமாக பேதம் காட்டும் முறையில் எந்த விதமான காரியத்தைச் செய்தாலும் ஆறு மாதம் வரை வெறுங்காவல் சிறை தண்டனை யாவது, ஐநூறு ரூபாய் வரை அபராத தண்டனை யாவது அல்லது இவ்விரண்டுவித தண்டனைகளு மாவது விதிக்கப் படத்தக்கவராவர்.

**6. சாமான்கள் விற்பதற்கும் சேவைகள் செய்வதற்கும் மறுப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை**

சாதாரணமாக அன்றுட தொழில் முறைகளுக்கிணங்க மற்ற நபர்களுக்கு எந்த சமயம், இடம், நிபந்தனைகளில் சாமான்கள் விற்கப்படுகின்றனவோ அல்லது சேவைகள் செய்யப் படுகின்றனவோ அதே காலம், இடம், நிபந்தனைகளில் யாராவது தீண்டாமையின் காரணமாக எந்த நபருக்காவது எவ்விதமான சாமான்கள் விற்கவும் எவ்விதமான தொழில்கள் செய்யவும் மறுத்தால், ஆறுமாதம் வரை வெறுங்காவல் சிறை தண்டனையாவது, ஐநூறு ரூபாய் வரை அபராத தண்டனை யாவது அல்லது இவ்விரண்டுவித தண்டனைகளுமோ விதிக்கப் படத்தக்கவராவர்.

**7. தீண்டாமையிலிருந்து உண்டாகும் மற்ற குற்றங் களுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை**

(1) யாராவது—

(a) அரசியல் சட்டம் 17-வது பிரிவின்படி ஒழிக்கப் பட்ட "தீண்டாமைக்" காரணமாகக் கிடைத் திருக்கும் உரிமையை எந்த நபரும் செலுத்து வதற்குத் தடை செய்தால் அல்லது,

(b) அந்த விதமான உரிமையைச் செலுத்தும் போது, எந்த நபரையும் அலட்டவோ, துன்புறுத்தவோ, தொந்தரவு செய்யவோ, தடுக்கவோ அல்லது தடுக்க எத்தனிக்கவோ செய்தால் அல்லது அந்த விதமான உரிமையைப் பாராட்டியதன் காரண மாக எந்த நபரையும் அலட்டவோ, துன்புறுத்த வோ, தொந்தரவு செய்யவோ அல்லது ஒதுக்கியோ வைத்தால்,

(c) எழுதிய அல்லது பேசிய சொற்களால், அடையாளத்தால் அபிநயத்தால் அல்லது வேறு விதத்தால் தீண்டாமையை எந்த விதமான உருவத்திலும் கையாள எவரையும், எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களையும் அல்லது பொதுவாக ஜன சமூகத்தையும் தூண்டினாலும், உற்சாகப் படுத்தினாலும்,

ஆறு மாதம் வரை வெறுங்காவல் சிறை தண்டனை யாவது ஐநூறு ரூபாய் வரை அபராத தண்டனையாவது அல்லது இரண்டு வித தண்டனைகளுமாவது விதிக்கப் படத் தக்கவராவர்.

**விளக்கம்:**—ஒரு நபர் மற்றொரு நபரை ஒதுக்கி வைப்பதாகக் (Boycott) கருதப்படுவதற்கு,

(a) எந்த விதமான வீட்டையோ அல்லது நிலத்தையோ வாடகைக்காக விடுவதற்கும், உபயோகப் படுத்த அனுமதி கொடுப்பதற்கும் அந்த மற்ற நபருடன் பழகவோ, அவருக்கு வேலை செய்யவோ, அவருக்காக வாடகைக்குப் பெறவோ அல்லது அவருடன் வியாபாரம் செய்யவோ அவரிடமிருந்து வாடிக்கையான தொழில் பெறவோ அல்லது அவருக்கு வாடிக்கையான தொழில் செய்யவோ அல்லது இங்குக் குறிப்பிட்டக் காரியங்களை அன்றுட தொழில் முறைகளுக் கிணங்க பொதுவாக செய்யப் படுகின்ற நிபந்தனையின் கீழ் செய்வதற்கு மறுத்தாலும்,

(b) அந்த மற்றவருடன் சாதாரணமாக வைத்துக் கொள்ளும் சமூக, தொழில், வியாபார சம்பந்தங்களை விட்டு விட்டாலும்,

(2) யாராவது—

(i) தன்னுடைய சமூகத்தையோ அல்லது அதன் பகுதியையோ சேர்ந்த ஒருவருக்கு அப்படிச் சேர்ந்திருக்கிற காரணத்தால் கிடைக்க வேண்டிய உரிமைகளையும், சலுகைகளையும் கொடுப்பதற்கு மறுத்தால்,

(ii) தீண்டாமையைக் கடைப்பிடிக்கவில்லை என்ற காரணத்தாலும், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்கேற்ருற் போல் ஏதாவது காரியத்தைச் செய்தமைக்காகவும் அந்த நபருடைய சாதி விலக்கில் பங்கெடுத்துக் கொண்டால் ஆறு மாதம் வரை வெறுங்காவல் சிறை தண்டனையோ அல்லது ஐநூறு ரூபாய் வரை அபராத தண்டனையோ அல்லது இவ்விரண்டு வித தண்டனைகளுமோ விதிக்கப் படதக்கவராவர்.

**8. லைசென்சுகளை ரத்து செய்வதும், தற்காலிகமாக நிறுத்தி வைப்பதும்.**

6-வது பிரிவின் கீழுள்ள குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட ஒரு நபர் அமுலில் இருக்கும் எந்தச் சட்டத்தின் கீழாவது குற்றம் செய்யப்பட்ட தொழில், வியாபாரம், உத்தியோகம், வேலை சம்பந்தமாய் ஒரு லைசென்சு வைத்திருந்தால், அக்குற்றத்தை விசாரிக்கும் கோர்ட் அவருக்கு அந்தப் பிரிவின் கீழ் ஏற்படக்கூடிய வேறுவித தண்டனைக்கு இடையூறு இல்லாமல் அந்தக் கோர்ட்டு அபிப்பிராயப்படுகிற, அல்லது விரும்புகிற காலத்திற்கு அந்த லைசென்சை ரத்து செய்யவோ அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ உத்திரவிடலாம். அப்படி ஒரு லைசென்சை ரத்து செய்யவோ அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்திரவும் அம்மாதிரியான எந்தச் சட்டத்தின் கீழ் லைசென்சை ரத்து செய்யவும், தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் தகுதியானு

அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவைப் போல் வன்மை பெறும்.

**விளக்கம்:—** இந்தப் பிரிவில் லைசென்சு என்பது அனுமதிச் சீட்டு (Permit), அனுமதி (Permission) இவைகளையும் உட்படுத்தும்.

**9. சர்க்காரால் கொடுக்கப்பட்ட மான்யங்களைத் திருப்பி எடுத்துக்கொள்வதும், தற்காலிகமாக நிறுத்தி வைப்பதும்**

சர்க்காரிடமிருந்து, நிலமாகவோ அல்லது பணமாகவோ மான்யம் பெறும், போது ஜன தொழுகைக்காக இருக்கும் இடத்தின் மானேஜரோ அல்லது தர்மகர்த்தாவோ இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டால், அந்தத் தண்டனை அப்பீல் மூலமாகவும், ரிவிஷன் மூலமாகவும் ரத்து செய்யப்படா விட்டாலும், அல்லது திருப்பப்படா விட்டாலும், சர்க்கார் தங்கள் அபிப்பிராயத்தில் அம்மாதிரியான நடவடிக்கை அந்த வழக்கின் சந்தர்ப்பத்திற்குத் தகுதியானது என்று தெரிந்தால், அம்மாதிரியான மான்யம் முழுமையுமோ அல்லது எந்தப் பகுதியுமோ, திரும்பப் பெறவும் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் உத்திரவிடலாம்.

**10. குற்றம் செய்யத் தூண்டுதல்**

இந்தச் சட்டத்தின் கீழ் எந்தக் குற்றத்தையும் செய்யத் தூண்டும் எவரும் அந்தக் குற்றத்திற்காக விதிக்கப்பட்டுள்ள தண்டனையை, விதிக்கப்படத் தக்கவராவர்.

**11. திரும்பவும் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால் அதிகப்படியான தண்டனை**

எவராவது இச்சட்டத்தின் கீழ் வரும் எக்குற்றத்திற்காவது குற்றவாளி என்றும் அல்லது அக் குற்றத்தைச் செய்ய தூண்டுதல் செய்தார் என்றும் தண்டிக்கப்பட்டு மீண்டும் அதே மாதிரி

யான குற்றத்திற்காகவும், தூண்டுதலுக்காகவும் குற்றவாளி என்று தண்டிக்கப்பட்டால் அப்படி பின்னுல் ஏற்படுகின்ற ஒவ்வொரு குற்றத் தீர்ப்புக்கும் சிறை தண்டனையும், அபராத தண்டனையும் சேர்ந்து விதிக்கப்படத்தக்கவராவர்.

## 12. சில வழக்குகளில் கோர்ட்டின் அனுமானம்

அரசியல் சட்டத்தில் 366-வது பிரிவு **24-வது** ஷரத்தில் விளக்கப்பட்டுள்ளபடி ஷெடுயூல்டு சாதியைச் சேர்ந்த ஒருவர் சம்பந்தமாய் இச்சட்டத்தின் கீழ் குற்றம் என்று கருதப்படும் எக் காரியமாவது செய்யப்பட்டால் கோர்ட்டில் அதற்கு மாருக நிரூபிக்கப்பட்டாலொழிய அக் காரியம் தீண்டாமையின் காரண மாகச் செய்யப்பட்டது என்று கோர்ட்டு அனுமானித்துக் கொள்ளும்.

## 13. சிவில் கோர்ட்டுகளுடைய அதிகார வரம்பு (Jurisdiction)

(i) எந்த வழக்கிலும், நடவடிக்கையிலும் கேட்கப்படு கின்ற பரிகாரமும், கூறப்படுகின்ற தீர்ப்பும் அல்லது நிறைவேற்றமும் இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு எந்த வகையிலும் முரண்பட்டதாக இருந்தால், எந்தச் சிவில் கோர்ட்டும் அம்மாதிரி யான வழக்கையும் நடவடிக்கையையும் ஏற்று தொடர்ந்து நடத்தாது. அல்லது எந்தவிதமான தீர்ப்பும் கூருது. உத்திரவும் போடாது. அல்லது எந்தத் தீர்ப்பையும், அல்லது உத்திரவையும் முழுமையாகவோ, பகுதியாகவோ நிறை வேற் ருது.

(ii) எந்த வழக்கையும் விசாரிக்கும் போது அல்லது எந்தத் தீர்ப்பையும், உத்திரவையும் நிறைவேற்றும் போது எந்தக் கோர்ட்டும் எந்த நபர் மேலாவது தீண்டாமையின் காரணமாக தகுதியின்மையை

சுமத்துகின்ற வழக்கத்தையும் ஆசாரத்தையும் ஒப்புக்கோள்ளாது.

## 14. கம்பெனிகள் செய்யும் குற்றங்கள்

(1) இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்யும் நபர் ஒரு கம்பெனியாக இருந்தால் குற்றம் செய்யப்பட்ட சமயத்தில் ஒவ்வொரு நபரும் அந்தக் கம்பெனியைத் தன் பராமரிப்பில் வைத்துக் கோண்டும், அக்கம்பெனியின் அலுவல்களை நடத்துவதற்குத் தான் பொறுப்பாளியாகவும் இருந்தால், குற்றம் செய்தவராகக் கருதப்படுவதோடு அவர் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படி தண்டிக்கப்படத் தக்கவராவர்.

ஆனல் அந்தக் குற்றம் தன்னுடைய அறிவிற்குப் புறம்பாக செய்யப்பட்டதாகவும், அக்குற்றம் நடப்பதைத் தடுக்க, தான் எல்லா விதமான முயற்சியை எடுத்துக் கோண்டதாகவும் நிரூபித்தால் அந்த நபரை இந்த உட் பிரிவில் அடங்கியுள்ள எதுவும் தண்டிக்கப் படத்தக்கவராக்க மாட்டாது.

(2) இச்சட்டத்தின் உட்பிரிவு (1) ல் அடங்கியுள்ளது எதுவாக இருப்பினும் இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றம், அந்தக் கம்பெனியின் டைரக்டர், மானேஜர், காரியதரிசி அல்லது வேறு உத்தியோகஸ்தரின் அனுமதியின் பேரில் செய்யப்பட்டதாக இருந்தால் அவர்கள் அக் குற்றத்தைச் செய்ததாகக் கருதப்படுவதோடு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படி தண்டிக்கப்படத் தக்கவராவார்கள்.

**விளக்கம்:**—இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக

(a) கம்பேனி என்ருல் கூட்டுச் சங்கத்தையும் (Body corporate) கூட்டு வியாபாரத்தையும் (firm) மற்ற தனிப்பட்ட நபர்களின் சங்கத்தையும் உட்படுத்தும்.

(b) கூட்டு வியாபார சம்பந்தமாக டைரக்டர் என்ருல் ஒரு பங்குதாரர் என்று பொருள் படும்.

**15. இந்தச் சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள் அறியக் கூடியதும் (Cognizable) சமாதானம் செய்து கொள்ளக் கூடியதும் (Compoundable) ஆன குற்றங்கள்**

1898-ம் வருஷத்திய கிரிமினல் ப்ரோசிஜர் கோடில் (குற்ற நடவடிக்கைச் சட்டம்) அடங்கியுள்ளது எதுவாக இருந்தாலும்.

(a) இந்தச் சட்டத்தின் சீழ் வரும் ஒவ்வோரு குற்றமும் அறியத்தக்கது, (Cognizable)

(b) அம்மாதிரியான ஒவ்வோரு குற்றமும் கோர்ட்டினுடைய அனுமதியின் மீபரில் சமாதானம் செய்து வைக்கப் படத்தக்கது (Compoundable)

**16. இந்தச் சட்டம் மற்றச் சட்டங்களைப் புறக்கணிக்கும்.**

மற்றபடி வெளிப்படையாக இந்தச் சட்டத்தில் சொல்லப் பட்டிருந்தாலொழிய தற்சமயம் அமுலில் இருக்கும் மற்ற எந்த வித சட்டத்திலும் அல்லது எந்த விதமான வழக்கம், ஆசாரம், பத்திரம், முதலியவைகளிலும் அம்மாதிரியான சட்டம், தீர்ப்பு, கோர்ட்டின் உத்திரவு அல்லது மற்ற அதிகாரத்தால் அமுலில் இருந்தாலும் அவைகள் ஏதாவது இந்தச் சட்டத்தின் ஷரத்துகளுக்கு முரணானதாயிருந்தால் இந்தச் சட்டத்தின் ஷரத்துகளுக்கே வன்மையுண்டு.

**17. ரத்து செய்தல்**

ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள சட்டங்கள் எந்த அளவுக்கு, அவைகளும், அவைகளில் உள்ள ஷரத்துக்களும் இந்தச் சட்டத்துக்கும், இதிலடங்கியுள்ள ஷரத்துகளுக்கும் ஒத்திருக்

கின்றனவோ அல்லது முரணுக இருக்கின்றனவோ அந்த அளவுக்கு இதனுல் ரத்து செய்யப்படுகின்றன.

## ஷெட்யூல்

1. பிஹார் ஹரிஜன் (சிவில் தகுதி இன்மையை நீக்கும்) சட்டம் 1949. (1949-ம் வருஷத்திய 192-வது பிஹார் சட்டம்)

2. பம்பாய் ஹரிஜன் (சமூக தகுதி இன்மையை நீக்கும்) சட்டம் 1946. (1947-ம் வருஷத்திய 10-வது பம்பாய் சட்டம்)

3. பம்பாய் ஹரிஜன ஆலயப் பிரவேசச் சட்டம் 1947. (1947–ம் வருஷத்திய 35-வது பம்பாய் சட்டம்)

4. மத்திய மாகாணம் பீரார் ஷெட்யூல்டு வகுப்புகளின் (சிவில் தகுதியின்மைகளை நீக்கும்) சட்டம் 1947. (1947-ம் வருஷத்திய 24-வது மத்தியமாகாண பீரார் சட்டம்)

5. மத்தியமாகாணம் பீரார் ஆலயப் பிரவேச அதிகார மளிக்கும் சட்டம் 1947. (1947-ம் வருஷத்திய 41-வது சட்டம்)

6. கிழக்குப் பஞ்சாப் (மத, சமூக தகுதியின்மைகளை நீக்கும்) சட்டம் 1948. (1948-ம் வருஷத்திய கிழக்குப் பஞ் சாப் 16-வது சட்டம்).

7. சென்னை சிவில் தகுதியின்மைகளை நீக்கும் சட்டம் 1938. (1938-ம் வருஷ சென்னை 21-வது சட்டம்)

8. ஒரிசா சிவில் தகுதி இன்மைகளை நீக்கும் சட்டம் 1946. (1946-ம் வருஷத்திய ஒரிசா 11-வது சட்டம்)

9. ஒரிசா ஆலயப் பிரவேச அதிகாரமளிக்கும் சட்டம் 1948. (1948-ம் வஷத்திய ஒரிசா 11-வது சட்டம்)

10. ஐக்கிய மாகாண சமூக தகுதி இன்மைகளை நீக்கும் சட்டம் 1947. (1947-ம் வருஷ ஐக்கிய மாகாண 14-வது சட்டம்).

11. மேற்கு வங்காள ஹிந்து சமூக தகுதி இன்மைகளை நீக்கும் சட்டம் 1948. (1948-ம் வருஷ மேற்கு வங்காள 37-வது சட்டம்)

12. ஹைதராபாத் ஹரிஜன ஆலயப் பிரவேச சட்டம் 1358 F. (1358-ம் பசலி 55-ம் நம்பர்)

13. ஹைதராபாத் ஹரிஜன (சமூக தகுதி இன்மைகளை நீக்கும்) சட்டம் 1358 F. (1358-ம் பசலி 56-ம் நம்பர்).

14. மத்திய பாரத ஹரிஜன் அயோக்த நிவாரண் விதன் சம்வத் 2005. (மத்திய பாரதம் 1949-ம் ஆண்டு 15-வது சட்டம்).

15. சிவில் தகுதி இன்மைகளை நீக்கும் சட்டம் 1943. (1943-ம் வருஷத்திய 42-வது மைசூர் சட்டம்).

16. மைசூர் ஆலயப் பிரவேச அதிகாரமளிக்கும் சட்டம் 1948. (1948-ம் ஆண்டு மைசூர் 14-வது சட்டம்)

17. சௌராஷ்டரம் ஹரிஜன (சமூக தகுதி இன்மைகளை நீக்கும்) அவசரச் சட்டம் (1948-ன் 40-ம் நம்பர்).

18. திருவாங்கூர், கோச்சி சமூக தகுதி இன்மைகளை நீக்கும் சட்டம் 1125. (1125 திருவாங்கூர் கோச்சி 8-வது சட்டம்)

19. திருவாங்கூர் கோச்சி ஆலயப் பிரவேச (தகுதி இன்மைகளை நீக்கும்) சட்டம் 1950. (திருவாங்கூர் கோச்சி 1950-ம் வருஷ 27-வது சட்டம்)

20. குடகு ஷெட்யூல்டு வகுப்புகள் (சிவில், சமூக தகுதியின்மைகளை நீக்கும்) சட்டம் 1949. (1949 1-வது சட்டம் குடகு)

21. குடகு ஆலயப் பிரவேச அதிகாரமளிக்கும் சட்டம் 1949. (1949-ம் வருஷத்திய குடகு சட்டம)

Z2,5127'N56
N57

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 110493
EGMORE, MADRAS-600 008

---

குறிப்பு :—இவ்வெளியீட்டில் காணப்படும் குறைவு நிறைவுகளைக் கூறுவதற்கு வாசகர்கள் முன்வருவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படும். பல நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்ட இப்புத்தகத்தைப் படிப்பவர்களும், தீண்டாமை ஒழிப்பில் ஆர்வமுள்ள அனைவரும் எனக்கு ஊக்கமளிக்குமாறு வேண்டுகிறேன்.

**ஆசிரியர்.**

2C
30/7